பக்கங்கள்: 18

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 தை 12 வியாழக்கிழமை 26.01.2023 கதிர் 79

## இது ரகசியம் அல்ல!

நாடு பொருளாதார நெருக்கடிக்குள் சென்றாலும் சென்றது ஜனநாயகம், முற்போக்குக்கொள்கைகள் எல்லாம் கிடப்புக்குள் சென்றுவிட்டன. நல்லாட்சி என்று கூறி ஆட்சிக்கு வந்த ரணில் இன்று எப்படி அராஜக ஆட்சியின் தலைவராக ☞ 2

### யாழ். குடாநாட்டில் அரச ஏற்பாட்டில்

# சுதந்திரதினம் நடந்தால் போராட்டம் வெடிக்கும்

### அருட்தந்தை சத்திவேல் எச்சரிக்கை



தமிழர்களைக் கோபப் படுத்தி வீதிக்கு இறங்க வைக்கும் நிகழ்வே வடக்கில் நடத்த விருக்கும் சுதந்திர தின நிகழ்வு என்று அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் கண்டித்தார். ☞ 2

## புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் வெளியீடு

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் நேற்றி ரவு வெளியாகியுள்ளன.

பெறுபேறுகளைப் பரீட்சைத் திணைக்களத்தின் இணையத் தளமான www.doenets.lk என்ற இணையத்தளத்திலோ அல்லது results.exams.gov.lk என்ற இணையத்தளத்திலோ பார்வையிட முடியும் என்று பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். ☞ 2

## யாழ். மாவட்டத்துக்கு வெட்டுப்புள்ளி 143

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகியுள்ள நிலையில், மாவட்ட வெட்டுப்புள்ளியை பரீட்சை ஆணையாளர் நாயகம் எச்.ஜே.எம்.சீ. அமித் ஜயசுந்தர அறிவித்துள்ளார்.

அதன்படி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கான வெட்டுப்புள்ளி 143 ஆகும். ☞ 2

## பொஸ்கோ மாணவனுக்கு யாழ். மாவட்டத்தில் 191

(ந.லோகதயாளன்)

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பொஸ்கோ ஆரம்ப பாடசாலை மாணவன் யலீபன் யதூசிகன் 191 புள்ளிகளைப் பெற்றார். நேற்றிரவு கிடைத்த தகவலின் அடிப்படையில் முன்னணிப் பாடசாலைகளில் இவரது புள்ளிகளே கூடுதலானவை.

பொஸ்கோவில் 216 மாணவர்கள் தரம் 5 பரீட்சையில் தோற்றியதில் 154 மாணவர்கள் வெட்டுப் புள்ளியை தாண்டியுள்ளனர். ☞ 2

## இது சர்வாதிகார நாடல்ல!

### அரசிடம் சஜித் இடித்துரைப்பு



மக்களைச் சட்டவிரோதமாகச் சிறையில் அடைக்க நம் நாடு ஒரு சர்வாதிகார அல்லது எதேச்சதிகார நாடல்ல.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் ☞ 2

## வெடிமருந்துகளுடன் வாகனம் தெற்கில் பொலிஸாரால் கைது

டைமனட் குச்சிகளை வாகனத்தில் இரகசியமான முறையில் மறைதது வைத்து எடுத்துச் சென்ற மன்னார் சிலவாத்துறையைச் சேர்ந்த இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் பயணித்த சிறிய பட்டா ரக வாகனம் மேலதிக பகுப்பாய்வுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. வாகனம் பிங்கிரிய விலட்டாவ என்ற இடத்தில் வீதிச் சோதனைச் சாவடியில் சிக்கியது. கைது செய்யப்பட்ட இருவரும் 33, 34 வயதுடையவர்கள்.

இவர்களிடமிருந்து வெடிமருந்துகள், வெடிக்கவைக்கும் கருவியான டெட்டனேட்டக்ள் என்பன ☞ 2

## வரத்தகர்களுக்கு ரூ. 5 லட்சம் தண்டம்

### பாவனைக்குதவாத பொருட்களை விற்றதற்காக

யாழ் மாநகரசபை பகுதியில் அமைந்துள்ள பலசரக்கு விற்பனை நிலையங்களில் காலாவதியான பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்த குற்றத்திற்காக 20 கடைகளுக்கு மொத்தமாக 5 லட்சத்து 40 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. ☞ 9

## சுயாதீன ஆணைக்குழுக்களின் உறுப்பினர் பதவிக்கு விண்ணப்பம்

### பொதுமக்களிடம் கோருவது என்று அரசமைப்புப் பேரவை முடிவு

நாட்டிலுள்ள சுயாதீன ஆணைக் குழுக்கள் அனைத்துக்கமான உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு அரசமைப்புச் சபை ஏகமனதாக முடிவு செய்துள்ளது.

அரசமைப்பின் கீழ் உருவாக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிப்பதற்காகப் பொதுமக்களிடம் இருந்து விண்ணப்பங்களைக் கோருவது என்று புதன்கிழமை கொழும்பில் கூடிய அரசமைப்புச் சபை தீர்மானித்தது.

அரசமைப்புப் பேரவையின் முதலாவது கூட்டம் சாபாநயகரும் அரசமைப்புப் பேரவையின் தலைவருமான மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அமைச்சர் நிமல் சிறிபால டி. சில்வா, நாடாளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லாத அங்கத்தவர்களான கலாநிதி பிரதாப் இராமானுஜம், கலாநிதி தில்குஷி அனுல விஜேசுந்தர, கலாநிதி தினோ சமரரத்ன ஆகியோர் கலந்துகொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் கபிர் ஹஷீம் தவிர்க்க முடியாத காரணத்தால் நேற்றைய கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாது என அறிவித்திருந்தார். நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகம் ☞ 9

## சுன்னாகம் வாள்வெட்டு மூவர் பொலிஸில் சரண்

சுன்னாகத்தில் பட்டப்பகலில் வாகனத்தால் காரில் பயணித்தவர்களை மற்றொரு வாகனத்தால் இடித்தும் வாளால் வெட்டியும் நடத்தப்பட்ட தாக்குதலின் முக்கிய சூத்திரதாரி எனச் சந்தேகிக்கப்படும் ஜெகன் ☞ 9

### அரசின் வரிக் கொள்கையை எதிர்த்து

## கூட்டங்களை புறக்கணிக்கும் பல்கலைக்கழக ஆசிரியர்கள்

அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வருமான வரிக் கொள்கைக்குத் தமது எதிர்ப்பை வெளிப்படுத்துமுகமாக அனைத்துப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் தொழிற்சங்க நடவடிக்கையில் குதித்துள்ளதாக அச் சங்கத்தின் செயலாளர் ரொகான் லக்சிறி அறிவித்துள்ளார்.

இதன்படி பல்கலைக்கழங்களில் நடக்கும் எந்தவொரு கூட்டத்திலும் விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் கலந்து கொள்ளமாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், இலங்கையில் ஜனவரி மாதம் முதல் ☞ 9

## பொருளாதார நெருக்கடியால் சுகாதார நெருக்கடி அபாயம்

### உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

இலங்கை பொருளாதார நெருக்கடி காரணமாக முன்னொருபோதும் இல்லாத சுகாதார நெருக்கடியையும் எதிர்கொண்டுள்ளது என்று உலக சுகாதார அமைப்பு தெரிவிக்கின்றது.

தொடரும் பொருளாதார நெருக்கடி சுகாதார துறையை மோசமாக பாதிப்பதால் பல இலங்கையர்கள் மருத்துவ சேவையை பெறும் வாய்ப்பை இழக்கின்றனர் எனவும் சுட்டிக்காட்டியுள்ள உலக சுகாதார அமைப்பு இலங்கைக்கு விரைவான உதவிகள் தேவை என்றும் அழைப்பு விடுத்துள்ளது.

இலங்கையின் அபிவிருத்திக்கு நிதி உதவி செய்பவர்களுடன் இணைந்து இலங்கையின் மருந்து மற்றும் ☞ 9

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாறிவிட்டாரோ அதேபோன்றுதான் ஆணைக்குழுக்களின் சுயாதீனத்தன்மையும் கேள்விக்குறியாகிவிட்டது.

இந்தச் சிக்கலுக்குள் இப்போது சிக்கித் தவிப்பது தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும்பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு. மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் ஏற்பட்டுள்ள முரண்பாடு பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்குக் கடும் அழுத்தமாக மாறிவிட்டது.

அதன் தலைவர் ஆட்சியாளர்களுடன் நேரடியாக மோதுவது என்று முடிவெடுத்துவிட்டதால் காதும் காதும் வைத்தது மாதிரி அரச தரப்பினரால் காரிய மாற்ற முடியவில்லை. ரணிலோ மின் சக்தி அமைச்சர் காஞ்சனவோ எதையாவது செய்யப்போனால் தலைவர் ஒரு பிடி பிடித்து உதறிவிடுகிறார்.

கடைசியாக நேற்று, அமைச்சர் காஞ்சன முட்டாள்தனமான முடிவுகளை எடுக்கிறார் என்று விளாசினார். எந்தத் தூரநோக்கும் இல்லாமல்தான் அவர் முடிவுகளை எடுக்கிறார் என்றும் விமர்சித்தார். இப்படி ஒருவர் நித்தமும் அரசுக்குத் தலையிடி கொடுக்கிறார் என்றால், மறுபுறத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவும் ரணிலின் வளைப்புக்கு, இழுத்த இழுப்புக்கு ஆட மறுக்கின்றது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை நடத்துவதற்கு ஆட்சியாளர்களுக்கு கொஞ்சமும்விருப்பமில்லை. இப்போது தேர்தலை நடத்தினால் அது பாதகமாகவே முடியும் என்பதில் அவர்கள் திடநம்பிக்கை கொண்டிருக்கின்றார்கள். அதனால் ஏதேதோ காரணங்களை முன்வைத்து தேர்தலை ஒத்திப்போட முயற்சிக்கிறார்கள். அதற்காக தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கும் கடுமையான அழுத்தம் கொடுக்கப்படுகின்றது. இதன் விளைவாகவே தேர்தல் திகதி இன்னமும் வர்த்தமானி ஊடாக அறிவிக்கப்படவில்லை. ஆணைக்குழு தேர்தல் திகதியை முடிவு செய்துவிட்டாலும் உத்தியோகபூர்வமாக வர்த்தமானி மூலம் அது அறிவிக்கப்படவில்லை.

இதனால் ஏதாவது திருகுதாளம் செய்தாவது ஆணைக்குழுக்களை வழிக்குக் கொண்டு வர ஆட்சியாளர்கள் முயற்சிக்கிறார்கள். இந்த நிலையில் ஆணைக்குழு உறுப்பினரான பி.எம்.எஸ்.சாள்ஸ் நேற்று தனது பதவிலிருந்து விலகினார். அவர் தனது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அவரது பதவி விலகல் கடிதம் அனுப்பப்பட்டது என்கிற தகவல் கசிந்தது முதல் அவரைத் தொடர்புகொள்ள ஊடகங்கள் எடுத்தமுயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. என்றாலும் அவர் பதவி விலகல் கடிதத்தை அனுப்பிவிட்டார் என்று உறுதிப்படுத்த முடிந்திருக்கிறது.

நேற்று ஆணைக்குழு உறுப்பினர்கள் நால்வரும் தொலைபேசி கூட்டு அழைப்பில் உரையாடியபோதும் சாள்ஸை அதில் முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

தற்போது அரச தரப்புக்கும் ஆணைக் குழுக்களுக்கும் இடையில் நிலவும் இழுபறிகளுக்கும் சாள்ஸின் பதவி விலகலுக்கும் நேரடித் தொடர்புகள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்கள் எல்லோரும் தொடர்ச்சியாக சிங்களத்தில் பேசுவதும் ஆணைக்குழுத் தலைவருடன் அடிக்கடி எழும் முரண்பாடுமே அவர் பதவி விலகுவதற்கான காரணம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மற்றொரு விடயத்தையும் இன்று வாசகர்களோடு பகிர்ந்துகொள்ள வேண்டியிருக்கிறது. இது தேர்தல் காலம் இல்லையா? அதனால் ஒவ்வொரு அசைவும் நகர்வும் முக்கியமானவை..

ஜனநாயகப் பேரளிகள் கட்சியைச் சேர்ந்தவர்கள் மீண்டும் இந்தியாவிற்குச் செல்ல உள்ளனர். கட்டுநாயக்காவில் இருந்த இன்று புறப்படும் அவர்கள் புதுடில்லியில் சில பல உயரதிகாரிகள் மட்டச் சந்திப்புக்களை நடத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. கடந்த வருட இறுதியில்தான் இந்தியா அழைத்து புதுடில்லிக்குப் போய் வந்திருந்தார்கள். இப்போது மீண்டும் பயணப்படுகின்றார்கள்.

கடந்த சில வருடங்களாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பயணித்து வந்த ஜனநாயகப் போராளிகள் இம்முறை ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் அணியில் சேர்ந்துகொண்டுள்ளனர். இந்த நிலையில் அவர்களது இந்தியப் பயணம் அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. தேர்தல் காலம் என்பதால் அனைத்து விடயங்களும் விரைவில் சந்தைக்கு வந்து சேரும் என்று எதிர்பார்ப்போம்!

- இடிமின்னல் -

## சுதந்திரதினம் நடந்தால் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரால் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் தமிழர்கள் சுதந்திரத்தை அனுபவித்தனர் என்று வரலாறு இல்லை. குறிப்பாக பிரித்தானியாவிடமிருந்து ஆட்சி கைமாறியதைத் தொடர்ந்து அரச பயங்கரவாதத்தின் வன்முறைகளுக்கும், இனவாதத் தாக்குதல்களுக்கும் முகம் கொடுத்தவர்கள் தொடர் இன அழிப்புக்கும் முகம் கொடுத்து திட்டமிட்ட இனப் படுகொலையையும் அனுபவித்தவர்கள் தமிழர்கள். தொடர்ந்து பல்வேறு முகங்களில் நடக்கும் இன அழிப்பையும் சந்தித்து வருகின்றனர்.

வடக்கு, கிழக்குக்கு வெளியில் வாழும் தமிழர்களும் அதனால் பாதிப்புற்று அவலங்களைச் சந்தித்துள்ளதோடு மலையகத் தமிழர்களும் சலனமற்ற இன அழிப்புக்கு உள்ளாகி வருகின்றனர்.

இந்நிலையில் வடக்கின் யாழ்ப்பாணத்தில் 75 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டம் நடத்த அரச தரப்பினர் திட்டமிடுவதும், அதுவும் சிங்கள பௌத்தத்தை முன்நிறுத்தி நடத்த முனைவதும் பேரினவாத ஆதிக்க மனப்பான்மையை மட்டும் அல்ல தமிழர்களைப் புண்படுத்தும் உள்நோக்கமும் கொண்டதாகும்.

இதனை வன்மையாக எதிர்க்கின்றோம். இது நிறுத்தப்பட வேண்டும். இல்லையெனில் பெரும் மக்கள் எதிர்ப்பையும் வீதிப் போராட்டங்களையும் சந்திக்க வேண்டி ஏற்படும் – என்றுள்ளது.

## புலமைப்பரிசில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை கடந்த டிசம்பர் 18 ஆம் திகதி நடைபெற்றது.

2 ஆயிரத்து 894 பரீட்சை நிலையங்களில் நடைபெற்ற இந்தத் தேர்வுக்கு 3 இலட்சத்து 34 ஆயிரத்து 698 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## யாழ். மாவட்டத்துக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை மாவட்டங்களுக்கான வெட்டுப்புள்ளி 142 ஆகும்.

அதேவேளை, கொழும்பு மாவட்டத்துக் கான வெட்டுப்புள்ளி 144 ஆகும்.

## பொஸ்கோ மாணவனுக்கு ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையில் 217 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியதில் 124 மாணவர்கள் வெட்டுப்புள்ளியை தாண்டியுள்ளனர். இவர்களில் கிரிதரன் அர்மிதா 186 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

யாழ். கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை மாணவன் உருத்திரகுமா மதுசணனும் 186 புள்ளிகள் பெற்றுள்ளார்.

கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் இம்முறை 188 மாணவர்கள் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றியதில் 91 மாணவர்கள் வெட்டுப்புள்ளியைத் தாண்டியுள்ளமையும்.

2022ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இடம்பெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறு நேற்று நள்ளிரவு வெளியாகியது.

முற்கொண்டு அறியமுடிந்த விவரங்களே இவை என்பது குறிப்பிடத்தக்கது.

## வெடிமருந்துகளுடன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீட்கப்பட்டிருப்பதால் பயங்கரவாதச் செயலுடன் இவர்களுக்கு தொடர்புகள் இருக்குமோ என்கிற சந்தேகத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ், அவர்களைத் தடுத்து வைத்து விசாரிக்க இருக்கின்றனர்

வெடிமருந்துநிரப்பப்பட்ட 89 குழாய்கள் 900, டெட்டனெர்டர்க் உருவாக்கக்கூடா – ரீத 900 டெட்டனேட்டர்கள் என்பன தம்மையும்நேட்டோ அமைப்பில் இணைத்துக் கொள்ளுமாறு தெரிவித்தார்.

## இது சர்வாதிகார .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மின்சார பாவனையாளர் சங்கத்தின் செயலாளர் சஞ்சீவ தம்மிக்க மற்றும் ஐக்கிய ஒன்றிணைந்த தொழிற்சங்கக் கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர் ஆனந்த பாலித ஆகியோரின் விடுதலையை வலியுறுத்தி ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் வரிச்சுமை அதிகரித்து, மின் கட்டணமும் அதிகரித்து, மக்களின் வாழ்வாதாரத்தை நிலைநாட்ட முடியாத நிலையில் இந்நாட்டின் துன்பப்படும் மக்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுப்பவர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளமை மிகுந்த வேதனையளிக்கின்றது.

சிறைப்படுத்தப்பட்டுள்ள ஆனந்த பாலித மற்றும் சஞ்சீவ தம்மிக்க ஆகியோருக்கு இந்நாட்டின் நீதித்துறை ஊடாக நீதிகிடைக்கும்எனநான்எதிர்பார்க்கின்றேன்.

மின் கட்டண உயர்வுக்கு எதிராகவும், எரிசக்தி துறையில் நிலவும் ஊழலுக்கு எதிராகவும், தற்போதைய அரசின் ஊழல் மற்றும் முறைகேடுகளுக்கு எதிராகவும் அவர்கள் முன்நின்று குரல் எழுப்பினர். அவர்கள் எந்த வன்முறை நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை.

அரசமைப்பு வழங்கிய பேச்சுரிமையை அவர்கள் பயன்படுத்தினர். மக்களைச் சட்டவிரோதமாக சிறையில் அடைக்க நம் நாடு ஒரு சர்வாதிகார அல்லது எதேச்சதிகார நாடல்ல. இது ஓர் ஜனநாயக நாடு. எனவே, இவ்விருவரினது ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்க, ஐக்கிய மக்கள் சக்தி முன்நிற்கும். அவர்களின் விடுதலைகாகச் சாத்தியமான அனைத்து அமைதியான, ஜனநாயக மற்றும் சட்ட ரீதியிலான போராட்டங்களை முன்னெடுப்பதற்கு நான் முன்நிலை வகிப்பேன் – என்றார்.




காலைக்கதிர் Kalaikkathir

'காலைக்கதிர்' பத்திரிகையில் கீழ்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. உதவி ஆசிரியர்
2. பக்க ஒப்புநோக்குநர்
3. பக்கவடிவமைப்பாளர்
4. செய்தியாளர்கள்
5. இத்துறைகளில் பயிற்சி பெற விரும்புவோர்களும் தொடர்புகொள்ளலாம்.

தொடர்புகளுக்கு -077 307 8799

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கை உள் விவகாரங்களில் அமெ. தூதர் தலையிடக்கூடாது!

## குணதாச அமரசேகர கோரிக்கை



கொழும்பு, ஜன. 26

இலங்கை உள் விவகாரங்களில் அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தலையிடக்கூடாது என தேசிய அமைப்புகளின் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அமெரிக்க தூதுவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தேசிய அமைப்புகளின் கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர் குணதாச அமரசேகர இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இலங்கையின் கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தாமதமாவதற்கு சீனாதான் காரணம் என தெரிவிப்பதன் மூலம் சீன எதிர்ப்பு உணர்வை அமெரிக்க தூதுவர் உருவாக்கக் கூடாது என அவர் கடிதமொன்றில் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கத் தூதுவர் மக்களை தவறாக வழிநடத்த முயல்கின்றார் இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையில் பகையை உருவாக்க முயல்கின்றார் என குணதாச அமரசேகர தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

சீனா ஏற்கனவே இலங்கையின் கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு இணங்கியுள்ளது. இந்த அவசியமான தருணத்தில் சீனா இலங்கைக்கு பெருமளவு மருந்து எரிபொருள், உணவு போன்றவற்றை வழங்கியுள்ளது என குறிப்பிட்டுள்ள நீங்கள் இலங்கை சீனாவிற்குஇடையில் பகைமையை ஏற்படுத்துவதன் மூலம் நிலைமையை மோசமாக்க முயல்கின்றீர்களா என தனது கடிதத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அமெரிக்கா இலங்கையின் உள்விவகாரங்களில் முன்னரும் தலையிட்டுள்ளது என குறிப்பிட்டுள்ள அவர் இலங்கையை மேலும் ஸ்திரமிழக்க செய்ய முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

சீன எதிர்ப்பு பிரசாரத்தை முன்னெடுப்பதன் மூலம் இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான நீண்டகால உறவிற்கு பாதிப்பை ஏற்படுத்தவேண்டாம் நீங்கள் உங்கள் இந்தோ பசுபிக் மூலோபாயத்தை முன்னெடுக்க முயல்கின்றீர்கள் என அவர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

# 3 லட்சம் டொலர் பெறுமதியான 13 நவீன தடுப்பூசி களஞ்சியங்கள்!

## நன்கொடையாக வழங்கியது ஜப்பான்



உரிய வெப்ப நிலையில் நீண்ட காலத்துக்கு தடுப்பூசிகளை களஞ்சியப்படுத்தி வைக்கக்கூடிய உயர் தொழில்நுட்பத்தைக் கொண்ட 13 தடுப்பூசி களஞ்சிய அறைகள் ஜப்பான் அரசாங்கத்தால் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன.

ஜப்பான் அரசாங்கத்தின் அவசர உதவியின் கீழ் நாட்டில் உள்ள குழந்தைகளின் நீண்ட கால மற்றும் குறுகிய கால சுகாதார தேவைகளைத் தொடர்ந்து மேம்படுத்துவதிலும் நிவர்த்தி செய்வதிலும் கவனம் செலுத்தி, இந்த அறைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த வேலைத்திட்டத்தை அடையாளப்படுத்தும் வகையில், தொற்றுநோய் பிரிவில் நிறுவப்பட்டுள்ள 3 தடுப்பூசி களஞ்சிய அறைகள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல மற்றும் ஜப்பான் தூதுவர் மிசுகுஷி ஹிடேகி ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டன.

இந்த நன்கொடையை யுனிசெப் நிறுவனத்துடன் இணைந்து ஜப்பான் அரசாங்கம் வழங்கியது. 3 லட்சம் டொலருக்கும் அதிக பெறுமதியுடைய இந்த 13 தடுப்பூசி களஞ்சிய அறைகளில் மூன்று தொற்றுநோய் பிரிவுக்கும், ஏனையவை மாவட்ட சுகாதார மருத்துவ பிரிவுகளுக்கும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## வேலைக்குச் சென்ற இடத்தில் துன்புறுத்தப்பட்ட

# 47 இலங்கை பணிப் பெண்கள் குவைத்திலிருந்து திரும்பினர்

கொழும்பு, ஜன. 26

குவைத்தில் வீட்டுப் பணிப் பெண்களாக பணிபுரிந்தபோது பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கினர் என்று கூறப்படும் 47 இலங்கைப் பெண்கள் நேற்று (புதன் கிழமை) காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

குறித்த 47 இலங்கை பணிப்பெண்களும் குவைத்தில் பணிபுரியும்போது தமது எஜமானர்களால் பல்வேறு இன்னல்களுக்கும் துன்புறுத்தல்களுக்கும் ஆளாகி, உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டவர்கள் எனத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

இதேவேளை, சுமார் 1,300 இலங்கை பெண்கள் இலங்கைக்கு வரமுடியாமல் குவைத்தில் தங்கியிருக்கின்றனர் என அந்நாட்டு இலங்கை தூதரகத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வர எதிர்பார்க்கும் இவர்களை விரைவில் நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

# புத்தளம் உணவகத்தில் நேற்று திடீர் தீ விபத்து

புத்தளம் பாலாவி பகுதியில் உணவகமொன்றில் நேற்று (புதன்கிழமை) காலை ஏற்பட்ட எரிவாயு கசிவால் தீப்பற்றியுள்ளது.

இதன்போது அங்கிருந்தவர்கள் உடனடியாக தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

இந்தத் தீயில் ஒருவர் பலத்த காயங்களுக்குள்ளாகிய நிலையில் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சீனாவிற்கே குடைச்சல் கொடுத்த கில்லாடிகள்

## போலி கடிதத் தலைப்பு குறித்து தூதரகம் விளக்கம்

கடன் மறுசீரமைப்பு தொடர்பாக இலங்கையின் ஜனாதிபதி மற்றும் நிதியமைச்சருக்கு சீன தூதரகத்தின் உத்தியோகபூர்வ கடிதத் தலைப்பைப் பயன்படுத்தி சமூக ஊடகங்களில் வெளியான கடிதம் போலியானது என்று கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

சமூக ஊடகங்களில் பகிரப்பட்ட மேற்படி கடிதத்தில் இருதரப்பு , வணிகக் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு 5 ஆண்டு கால அவகாசத்தை வழங்குவதன் மூலம் திருப்பிச் செலுத்தும் அட்டவணையைத் தளர்த்த சீனா தயாராக உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயத்தை மறுத்துள்ள சீனத் தூதரகம், தனது உத்தியோகபூர்வ கடிதத் தலைப்பின் கீழ், இலங்கை ஜனாதிபதி மற்றும் நிதியமைச்சருக்கு எழுதப்பட்ட சமூக ஊடகங்களில் பரவும் கடிதம் முற்றிலும் போலியானது என்றும் தெரிவித்துள்ளது.

எனவே உத்தியோகபூர்வ தகவல் ஆதாரங்களை மட்டுமே பின்பற்றுமாறு தூதரகம் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து நிதியுதவி பெறும் முயற்சியில் இலங்கை தனது சர்வதேச கடன் வழங்குநர்களிடம் கடன் மறுசீரமைப்புக்கான பேச்சுகளை முன்னெடுத்து வரும் நிலையில் இவ்வாறான இந்த போலி கடிதம் பகிரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போலி பதிவு இலக்கத்துடன் ஜீப் பிலியந்தலவில் சிக்கியது



கொழும்பு, ஜன. 26

சட்டவிரோதமான முறையில் இறக்குமதி செய்யப்பட்டு போலி பதிவு இலக்கத்துடன் பயன்படுத்தப்பட்ட சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான சொகுசு ஜீப்புடன் பிலியந்தலை பொகுந்தர பொருளாதார நிலையத்துக்கு அருகில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பாணந்துறை வலான மத்திய ஊழல் ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பில் உள்ள பிரபல தனியார் தோட்ட நிறுவனம் ஒன்றின் ஜீப் வண்டியின் பதிவு இலக்கம் அந்த ஜீப்பில் பொருத்தப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது, வாகன மோசடி தொடர்பில் பொலிஸாரால் முன்னர் கைது செய்யப்பட்ட கம்பஹாவில் வாகன விற்பனை நிலையம் ஒன்றை நடத்தும் நபர் தொடர்பிலும் பல தகவல்கள் கிடைத்துள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## என்ன செய்யப் போகிறார் ரணில்?

இலங்கை பிரிட்டிாரின் பிடியிலிருந்து விடுபட்டதன் 75ஆவது ஆண்டு தினத்தைக் கொண்டாட ஒரு வாரம் மட்டுமே எஞ்சியிருக்கின்றது. வழக்கம்போலவே இந்தக் காலப்பகுதி கொண்டாட்டங்களுக்கான ஏற்பாடுகளும் எதிர்ப்புமாகக் கடந்து போகின்றது.

இந்த சுதந்திர தினத்திற்கு முன்பாக தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்றும் இல்லையேல் தீர்வை எட்ட முடியுமா இல்லையா என்பதையாவது மக்களுக்கு அறிவிப்பேன் என்றும் அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

அதனடிப்படையில் அனைத்தக் கட்சிக் கூட்டம், தமிழ்த் தலைவர்களுடனான பேச்சு என்று சில முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால் அவற்றின் எந்த அடைவும் இதுவரையில் காணப்படவில்லை. வழக்கம்போலவே குறிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் அடைவு பூஜ்ஜியம் மட்டுமே.

இலங்கை தனது சுதந்திரதினத்தைக் கொண்டாடுவதற்கு முன்னதாகக் குறைந்தபட்சம் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை, காணி விடுவிப்பு, காணாமற்போனவர்களுக்கான தீர்வு, அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துதல் ஆகியவற்றில் முன்னேற்றங்களைக் காட்டுமாறு தமிழ்த் தரப்பு அரச தலைவரிடம் வலியுறுத்தியிருந்தது.

இடைப்பட்ட இந்தக் காலத்தில் இவற்றில் எந்தவொன்றிலும் சிறு முன்னேற்றம்கூட ஏற்படவில்லை. வழக்கம்போல எல்லா விடயங்களையும் செய்கிறோம், நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன, இத்தனை கைதிகளை விடுவிக்கலாம், காணி விடுவிப்புக்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைக்கப்போகிறோம், காணி பொலிஸ் அதிகாரங்களை வழங்க நடவடிக்கை தொடக்கம் என்கிற வகையிலான செய்திகளும் வாக்குறுதிகளும்தான் இருக்கின்றனவே தவிர எந்தவொரு உருப்படியான நடவடிக்கையும் இல்லை.

எஞ்சியிருக்கும் 8 நாட்களுக்குள் இவை அனைத்தையும் செய்து முடிக்க முடியும் என்கிற நம்பிக்கையும் இல்லாத நிலையில் சுதந்திர தினத்தில் தமிழ் மக்களுக்குத் தீர்வு வழங்கும் சக்தியைத் கொண்டிருக்கவில்லை என்பதை அல்லது கொழும்பு பௌத்த சிங்க அரசு ஒன்றுக்கு அந்தத் திறமையோ நோக்கமோ கிடையாது என்பதை ரணில் விக்கிரமசிங்க பகிரங்கமாக அறிவிப்பாரா? அல்லது ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி மற்றொரு காலக்கெடுவை முன்வைப்பாரா?

# 9 பேரைக் காவுகொண்ட 6 வாகன விபத்துக்கள்!

நாட்டின் 6 இடங்களில் கடந்த 24 மணி நேரத்தில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் 6 வயது மாணவி உள்ளிட்ட 9 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன.

நீர்கொழும்பில் ஓட்டோவும் லொறியும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. இதன்போது 25 வயதுடைய ஓட்டோ சாரதியான இளைஞரும், அதில் பயணித்த நீர்கொழும்பு, வைத்தியசாலை வீதியைச் சேர்ந்த 68, 64 வயதுகளையுடைய வயோதிபத் தம்பதியினரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். விபத்து தொடர்பில் லொறியின் சாரதி பொலிஸாரால் கைது செய் யப்பட்டுள்ளார்.

காலி – எல்பிட்டியவில் ஹயஸ் வாகனமும் மினிபஸ்ஸும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. இதன்போது ஹயஸ் வாகனத்தின் சாரதியான 42 வயதுடைய குடும்பஸ்தரும், ஹயஸ் வாகனத்தில் முன் ஆசனத்தில் அமர்ந்து சென்ற 19 வயதுடைய இளைஞரும் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்த சாரதியும், இளைஞரும் அம்பாந்தோட்டையைச் சேர்ந்தவர்களாவர். விபத்து தொடர்பில் மினிபஸ்ஸின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அநுராதபுரத்தில் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்று கொண்டிருந்த பஸ்ஸிலிருந்து இருந்து மாணவி ஒருவர் முன்பக்கக் கதவின் ஊடாக தவறி விழுந்துள்ளார். இதன்போது காயமடைந்த 6 வயதுடைய மாணவி அனுராதபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். விபத்து தொடர்பில் பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

எம்பிலிப்பிட்டியவில் மோட்டார் சைக்கிளும் வானும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. இதன்போது மோட்டார் சைக்கிள் செலுத்திய 28 வயதுடைய இரத்தினபுரி பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். விபத்து தொடர்பில் வான் சாரதி உள்ளிட்ட மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு – மாளிகாவத்தையில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. இதன்போது மோட்டார் சைக்கிள் ஒன்றைச் செலுத்தி வந்த 37 வயதுடைய பம்பலப்பிட்டியைச் சேர்ந்த குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார். மற்றைய மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த 22 வயதுடைய இளைஞர் சிறுகாயங்களுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொரளையில் ஓட்டோ ஒன்றும் கார் ஒன்றும் நேருக்கு மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. இதன்போது 29 வயதுடைய ஓட்டோ சாரதியான இளைஞர் உயிரிழந்துள்ளார். குறித்த இளைஞர் மருதானையைச் சேர்ந்தவராவார். விபத்து தொடர்பில் காரின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# வெங்காயம், உ.கிழங்கு விலைகள் குறைப்பு

வெங்காயம், உருளைக்கிழங்கு ஆகியவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ வெங்காயத்தின் புதிய மொத்த விலை 130 ரூபா என அத்தியாவசியப் பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ உருளைக்கிழங்கின் புதிய மொத்த விலை 100 ரூபா எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வெங்காயத்தின் விலை கிலோ ஒன்றுக்கு 50 ரூபாவினாலும், இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு கிலோ ஒன்றின் விலை 80 முதல் 100 ரூபாவினாலும் வீழ்ச்சியடைந்துள்ளதாக அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ வெள்ளை சீனியின் மொத்த விலை 205 ரூபாவாகக் குறைந்துள்ளது.

# ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி மன்னாரில் பிரச்சாரம் தொடங்கியது

ஐந்து கட்சிகளை உள்ளடக்கிய ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணியின் உள்ளூராட்சித் தேர்தல் பரப்புரைக் கூட்டம் மன்னார் மாவட்டத்திலே வேட்பாளர் அறிமுகக் கூட்டத்துடன் நேற்றுத் தொடங்கியது. மணியளவில் மன்னார் நகர மண்டபத்தில் பகல் 11 மணியளவில் இடம்பெற்ற கூட்டத்தில் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோ நோகராதலிங்கம் தலைமையில் கூட்டம் இடம்பெற்றது. ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் புளொட் தலைவர் சித்தார்த்தன் ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், தமிழ் தேசிய கட்சித் தலைவர் சிறீகாந்தா, நாடாளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரம்(ஜனா), முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், ஜனநாயக போராளிகள் கட்சி சார்பாக வேந்தன் ஆகியோர் உரையாற்றினர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தற்போதைய கூட்டணிக்கு வந்த கதைகயை, நடந்த நிகழ்வுகளைத் தலைவர்கள் தமது உரையில் எடுத்து விளக்கினர். 5 கட்சிகளும் எதற்காக ஒன்றிணைந்து இம்முறை உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடுகிறார்கள் என்பது குறித்தும் விளக்கினர்.

குறித்த அறிமுகக் கூட்டத்தில் குறித்த 5 கட்சிகளையும் உள்ளடக்கி மன்னார் மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களும் கலந்துகொண்டனர்.

# வவுனியா விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

தட்டாங்குளம் பகுதியில் புதன்கிழமை இடம்பெற்ற விபத்தில் நபர் ஒருவர் உயிரிழந்தார்.

வவுனியாமாவட்டம்செட்டிகுளத்தில்அமைந்துள்ளது தட்டாங்குளம். நேற்று மாலை அங்கு மோட்டார் சைக்கிள் ஒன்றும் கன்ரரும் மோதி விபத்துக்குள்ளாகின.

செட்டிகுளம்பகுதியில்இருந்துபூவரசங்குளம் நோக்கி சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் எதிரே வந்துகொண்டிருந்த கன்ரரும் விபத்துக்குள்ளாகின.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் வந்தவர் படுகாயமடைந்தார். உடனடியாக அவர் வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

ரங்கெத்கம பகுதியை சேர்ந்த நந்தன கிருசாந்த வயது 41என்ற நபரே உயிரிழந்தார். விபத்து தொடர்பான விசராணைகளை செட்டிகுளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir







யாழ்ப்பாணம், ஜன. 26

போக்கட்டி அ.த.க பாடசாலையின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு கடந்த 20/01 வெள்ளிக்கிழமை பாடசாலை முதல்வர் தி.அபராஜிதன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் விருந்தினர்களாக வேர்ல்ட் வின் நிறுவன இணைப்பாளர் வை.ஆதித்தன், தென்மராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் சி.தேவகுமார் மற்றும் தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக செயற்பட்டு மகிழ்வோம் செயற்திட்ட இணைப்பாளர் திருமதி இ.மயில்வாகனசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# போதை வியாபார சந்தேகத்தில் மட்டக்களப்பில் இருவர் கைது

மட்டக்களப்பு, பொலிஸ் பிரிவிலுள்ள புதூர் மற்றும் கருவப்பங்கேணி பிரதேசங்களில் கையடக்க தொலைபேசி விற்பனை நிலைய உரிமையாளரையும் இன்னும் ஒரு வியாபாரியையும் 5 கிராம் 450 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் செவ்வாய்க்கிழமை இரவு தாம் கைதுசெய்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலஸ் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் வியாபாரியின் வீட்டை முற்றுகையிட்டுத் தேடிய சமயம் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை கருவப்பங்கேணி பிரதேசத்தில் கையடக்க தொலைபேசி விற்பனை



நிலையத்தினை நடத்திவரும் உரிமையாளரின் வீட்டை முற்றுகையிட்ட பொலிஸார், அங்கு 5 கிராம் 300 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் கைதுசெய்தனர்.

இவ்வாறு வெவ்வேறு சம்பவங்களில் கைதுசெய்யப்பட்ட இந்த இருவரும் நீண்ட காலமாக போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுவரும் இளைஞர்கள் எனவும் இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# முதலிகேயின் மறியல் மீண்டும் நீடிப்பு



பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள,அனைத்துப்பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே எதிர்வரும் 8ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

ஜனாதிபதி மாளிகை மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பான வழக்கு நேற்று கோட்டைநீதவான்திலினகமகே முன்னிலையில்விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.



காலைக்கதிர் Kalaikkathir

# இந்தியா - இலங்கை நாடுகள் இணைந்து ஒத்துழைத்துச் செயற்படுவது அவசியம்

## இந்தியத் தூதுவரா கோபால் பாக்லே தெரிவிப்பு



சுதந்திரத்தின் நூற்றாண்டு விழாவை நோக்கிப் பயணிக்கும் இலங்கை, இந்திய நாடுகள் ஒத்துழைப்புடன் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது மிக முக்கியம் என இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்தார்.

இந்தியாவின் 74ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களின் தலைமையில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றுகையிலே இந்தியத் தூதர் இதனை தெரிவித்தார்.

'நல்லிணக்கத்தின் ரிதம்' என்ற பெயரில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததோடு இந்தியாவின் நாகலாந்து பிரதேசத்தில் உருவான உலகப் புகழ்பெற்ற UDX இசைக்சுழுவும் இலங்கை Heavy metal Quintet Band Stigmata இசைக்குழுவும் இணைந்து இந்த இசை நிகழ்சியை நடத்தின.

இரு நாடுகளுக்கும் இடையிலான நெருங்கிய நட்புறவு, சமாதானம் மற்றும் சபீட்சம் என்பன தொடர்பிலான இருநாட்டு எதிர்பார்ப்புகளையும் வெளிப்படுத்தும் வகையில் இரு இசைக்குழுக்களும் தெரிவு செய்யப்பட்டதாக இந்திய உயர்ஸ்தானிகர் தனது உரையில் தெரிவித்தார்.

தனது உரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியா வளர்ந்து வரும் பொருளாதாரத்தையும் பல்வகைமையுடைய ஜனநாயகத்தையும் கொண்டுள்ள நாடாகும். இந்த நிலைமை இலங்கைக்கும் பொதுவானாதாகும்.

இலங்கை இன்னும் சில நாட்களில் தனது 75 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். எனவே மிகவும் நெருங்கிய நண்பர்கள் என்ற அடிப்படையில் நாம் இந்நிகழ்வை ஒற்றுமையின் உண்மையான ரிதமாக கொண்டாட வேண்டும். இது வெவ்வேறு இசைக் குழுக்களின் இசைச் சங்கமம் மட்டுமல்ல இது இலங்கை மற்றும் இந்தியாவின் ஒற்றுமையையும் குறிக்கும்.

75 ஆவது சுதந்திர தினத்துடன் நாமும் எமது ஒற்றுமை மற்றும் 75 வருட இராஜதந்திர உறவைக் கொண்டாடுவதுடன் எமது நூற்றாண்டு சுதந்திர விழாவை நோக்கிய எமது பயணத்துக்காக எம்மை மீண்டும் அர்ப்பணிப்போம் என்றும் தெரிவித்தார்.

அரசியல் தலைவர்கள், தொழில் வல்லுநர்கள், விஞ்ஞானிகள், இராஜதந்திரிகள், அதிகாரிகள் மற்றும் அரசு ஊழியர்கள் மட்டுமன்றி சமூகத்தின் ஒவ்வொரு பிரிவினரும் இப்பயணத்தில் பங்கு வகிக்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், இலங்கை , இந்தியப் பிரஜைகள் உள்ளிட்டோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

# துருக்கியில் வேலைவாய்ப்பு என்றதும் குவிந்தவர்களால் அமைதிக்குலைவு

## போலி முகவர்களின் நாடகம் என்று அமைச்சர் சாடல்

துருக்கியில் வேலைவாய்ப்பு என்றதும் முகவர் நிறுவனத்தில் வந்து குவிந்த ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களால் கொழும்பில் நேற்று அமைதியின்மை ஏற்பட்டது. பொலிஸார் வந்து நிலமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவேண்டியிருந்தது.

கொழும்பு ஜே.ஆர்.ஜெவர்த்தன மையத்தில் வேலை வாய்ப்பு வழங்குவதாகக்கூறி நேர்முகத் தேர்வுக்கு அழைத்த நிறுவனம் போலியானது என்று தெரிவித்திருக்கும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் இந்தக் குற்றத்திற்காக ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கின்றார் என்றும் தெரிவித்தது.

கொழும்பில் போலியான தொழில் நேர்முகத் தேர்வை ஏற்பாடு செய்து பலரை ஏமாற்றிய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழிலாளர் அமைச்சர் மனு நாணயக்கார தெரிவித்தார்.

சமூக ஊடகங்களில் அறிவிப்பு வெளியிட்டு இந்தப் போலியான வேலை நேர்காணல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

துருக்கியில் சில வேலை வாய்ப்புகள் உள்ளன, ஆனால் அவை அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும். இந்த வகையான போலி வேலை மோசடிகளுக்கு இரையாவதைவிட, எங்கள் அதிகாரப்பூர்வ சேனல்களைப் பின்பற்றுமாறு வேலை தேடுபவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

துருக்கியில் உள்ள வேலை வாய்ப்புக்களுக்கு இலங்கையில் ஆட்சேர்ப்பு இடம்பெறுவதாகக் கூறப்படுவதற்கும் துருக்கியத் தூதரகத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று தூதகரம் அறிவித்துள்ளது.

இலங்கையில் துருக்கிய ஆட்சேர்ப்பு செய்து வருவதாக சமூக ஊடகங்களில் சில தவறான தகவல்கள் பரப்பப்பட்டு வருவதாக தூதரகத்தின் உடனடி கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள துருக்கிய தூதரகத்திற்கோ அல்லது துருக்கிய உள்துறை அமைச்சகத்திற்கோ இது போன்ற ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளுடன் தொடர்பில்லை. இது சில தனிப்பட்ட நபர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது என்று துருக்கிய தூதரகம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஒரு சமூக ஊடகப் பதிவைப் பார்த்து, துருக்கிய வேலைக்கான இலவச நேர்காணலுக்காக இலங்கை முழுவதிலும் இருந்து கிட்டத்தட்ட 1000 நபர்கள் கொழும்புக்குச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் உள்ள ஜே.ஆர்.ஜெயவர்தன மையத்தில் வேலை தேடுபவர்கள் திருப்பி அனுப்பப்பட்டதை அடுத்து வன்முறையாக மாறிய நிலைமையை கட்டுப்படுத்த பொலிஸாரை ஈடுபடுத்த வேண்டியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.






# தூக்குத் தண்டனை கைதிக்கு விடுதலை

தெல்கொட – மஹவத்தயில் அறுவர் கொலை செய்யப்பட்ட வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட இரண்டாவது குற்றவாளி விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

2007ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி தெல்கொட – மஹவத்த பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் நுழைந்து தாய், தந்தை, மகன்மார் மூவர் மற்றும் வயோதிப பெண் ஒருவரை கொலை செய்து, குறித்த வீட்டிலிருந்த உறவுமுறை பெண் ஒருவரை தாக்கி கூட்டுப் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கியமை தொடர்பில் கம்பஹா மேல் நீதிமன்றம் குற்றவாளிகளுக்கு தூக்குத் தண்டனை விதித்திருந்தது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் தீர்ப்பை அறிவித்த நிங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஆர்.குருசிங்க ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் அமர்வு, இந்த வழக்குடன் தொடர்புடைய இரண்டாவது சந்தேகநபரான வெலிவிட்ட லியனகே மகேஷ் வசந்த பெரேரா என்பவரை விடுதலை செய்து உத்தரவிட்டது.

மேல் நீதிமன்றத்தின் உத்தரவானது சட்டத்திற்கு மாறானதென தீர்மானித்து, மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## ஆள்கடத்தும் அலப்பறைகள்

**அங்கம் - 249**



தமிழ் மக்கள் புரிந்து. தெளிவடைந்து கொள்ள வேண்டும் என்பதற்காக, மீண்டும் இரண்டு பதிவுகளை பகிர்ந்து கொள்ள வேண்டுமென எண்ணுகிறேன்.

"ஐ.நாவுக்கென்று கூறி ஆள்கடத்தும் புலம்பெயர் அலப்பறைகள்" என்ற தலைப்பில் பதியப்பட்டது ஒன்று. ஐ.நாவின் நடப்புக்களைப் பார்த்து, ஜெனிவாவுக்கு வரும் சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து அழுத்தம் தருவதற்கு என, தங்களது அமைப்புக்களின் பெயரால் சிலரை நாட்டிலிருந்து சுவிட்சர்லாந்து விசா எடுத்து வர உதவி செய்து, பின்னர் அவர்களை அகதிகள் தஞ்சம் அடிக்க வழி செய்வார்கள் இந்த அலப்பறைகள். அதற்கு 30 ஆயிரம் டாலர் பணம் பட்டுவாடா. நல்ல உழைப்பு.

இப்படி எல்லாம் பிழைத்து, உழைக்கத் தெரியாமல் பரிஸிலிருந்து 30 வருடங்களாக மக்களுக்கு என்று கிருபா வாத்தியார் மனித உரிமைகள் சபைக்கு வந்து போகிறார் என இந்தப் பதிவாளர் அனுதாபப்படுகிறார். இந்த பதிவும் ஐ.பி.சி. தமிழ் இணையதளத்தில் இருப்பது.

அடுத்த பதிவில் சர்வதேசத்தின் பல நாடுகள் என்னென்ன விதங்களில் பணம், ஆயுதம், தளபாடங்கள், அதற்குத் தேவையான பயிற்சிகள், அரசியல் உதவிகள் செய்தன என்பவற்றை வரிசைப் படுத்தி, அந்த வரிசையில் முதலாவதாக இந்தியா 200 மில்லியன் அமெரிக்க டாலர்கள் புலனாய்வு, ஆயுதப் பயிற்சிகள், அரசியல் ஆதரவுகள் வழங்கியது எனக் கூறி, தொடர்ந்து அமெரிக்க, பிரித்தானியா, தென்கொரியா, சீனா, இஸ்ரேல், ஈரான், செக் குடியரசு, ஜப்பான், மாலத்தீவு, இந்தோனேசியா, கிரீஸ், ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் செய்த உதவிகளைக் குறிப்பிட்டு, அவற்றை நொந்து, இந்த நாடுகள் விடுதலைப் புலிகளை ஒழிப்பதற்கு கங்கணம் கட்டி, தமிழ் மக்களையும் அழித்த போது, ஐ.நா. சபை அவர்களைப் பாதுகாக்க எது வித நடவடிக்கைகளும் எடுக்காது கைவிட்டதாகவும் வருந்தி, விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத பட்டியலில் இடுவதற்கு எடுத்த தீர்மானம் ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் முடிவல்ல, மாறாக, அமெரிக்க – பிரித்தானிய தரப்புக்களால் பிரசல்ஸ் (பெல்ஜியம்) நகரில் அமைந்த காபி கடைகளில் நடத்தப்பட்ட பேச்சுக்களின் அழுத்தத்தில்தான் இவர் செய்யப்பட்டன என ஸ்வீடனின் இராணுவ அதிகாரி மேஜர் வூல்வ் ஹென்றிக்ஸன் தெரிவித்தார் என இந்தப் பதிவு கூறுகிறது.

சர்வதேசத்தின் பல நாடுகள் விடுதலைப் புலிகளின் சமாதான பேச்சுக்களின் முறிவின் பின்னர் போருக்கு ஆதரவளித்தன என்பதும், மஹிந்த அதனை 'பயங்கரவாதத்திலிருந்து மக்களை மீட்பதற்கான போர்' எனக் குறிப்பிட்டு, அமெரிக்காவின் 'சர்வதேசப் பயங்கரவாதத்திற்கு எதிரான போர்' என்ற வளையத்தினுள் நடத்தினார் என்பதும் அறியப்பட்ட பின்னணி.

இந்த நாடுகள் தந்த உதவிகள் பதிவின்படி, பணத்தொகையில் அதன் தன்மைகளில் உண்மையாகலாம். அவை அந்தந்த நாடுகளின் தனிப்பட்ட, யதார்த்தமான முடிவுகள். அவரவர்களது வெளியுறவு சார்ந்த கொள்கைகளின் அடிப்படையில் அவை எடுக்கப்பட்டிருக்கலாம்.

தற்பொழுது தனது நலன்களும், அதன் எல்லைகளும், அத்துமீறிய குடிவரவுப்படகுகளால் மீறப்படவோ பாதிப்படையவோ கூடாது என்பதற்காக ஆஸ்திரேலியா அரசு கணிசமான புலம்பெயர் தமிழ் மக்கள் ஆளுமைகளுடன் அந்த நாட்டில் வந்திருந்தாலும், வருகின்ற படகுகளை திருப்பி ஸ்ரீலங்காவுக்கே அனுப்பி, அப்படியான சட்ட விரோதமான வெளியேற்றங்களை நாட்டுக்குள்ளேயே முடக்குவதற்கு ரோந்துப் படகுகள் உட்பட பலவகை உபகரணங்களையும் மேம்படுத்துவதற்காக நிதி உதவிகளையும் ஸ்ரீலங்கா கடற்படைக்குத் தருகிறது.

தமிழ் மக்கள் அகதிகளாக வெளியேறுவதற்கு ஆஸ்திரேலியா உதவிகள் தராது, ஸ்ரீலங்காவோடு சேர்ந்து அனுசரணைகள் தருகிறது என்பதின் நியாய வாதங்களை சர்வதேசங்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. பாதிப்புக்குள்ளாகிய மக்களை பணத்திற்காக ஆள் கடத்தும் கும்பல்கள்தான் இவற்றின் பின்னணியில் இயங்குகின்றன என்பது ஆஸ்திரேலியாவின் நிலை மட்டுமல்ல, அமெரிக்கா, கனடா, பிரித்தானியா, ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் நிலைப்பாடும் அதுவே.

மாறாக, தொப்புள் கொடி உறவுகள் என, பாதிப்பினாலும் பஞ்சத்தினாலும் வெளியேறுபவரை அனுமதித்து பராபரிப்பது தமிழ்நாடுதான். அவற்றை உறவுக்காக பெரிதாக பேசுவதில்லை. இப்படியான அலப்பறைகளின் பதிவுகளை இப்பொழுது பதிபவர்கள் மற்றவர்களுடன் காற்று நன்றாக வீசியபோது ஒன்றாக இணைந்து இயங்கியவர்கள்தான்.

முரண்பாடுகளில் பிரிவினைகள் தோன்றும் போது, பிரபாகரனையும், தேசியத்தையும், அதன் வரலாறுகளையும், யார் பாதுகாப்பது, முன்னெடுத்துச் செல்வது என்ற கோங்கள்? யார் உண்மையானவர்கள்?

குற்றச்செயல்களில் சேர்ந்து ஈடுபட்ட ஒருவர் காயப்பட்டு மரணிக்கும் தருவாயில், அவர் அனேகமாக மரண நேரத்தின் வாக்குமூலம் என ஒன்று தருவது வழமை. அதில் தன்னையும், சக பாடிகளையும் விலத்தியோ அல்லது தன் மீது எல்லாவற்றையும் ஏற்று எதிரிகளுக்கு எதிராகவோ இந்த வாக்குமூலம் அமைவது சகஜம். அதேபோல் கிறிஸ்தவர்கள் மரணம் நெருங்கும் போது தங்கள் பாவங்களுக்கு பாதிரியாரிடம் மன்னித்து விமோசனங்கள் தேடுவதும் உண்டு.

இப்படியான பதிவுகள் எல்லாம் தமிழ் மக்களது விடுதலையை அல்லது அவர்களது உரிமைப் போராட்டத்தை எவ்வளவு தூரம் முன்னெடுக்கிறது அன்றில் நீர்த்துப்போகச் செய்கிறது மரண படுக்கைக்கு விட்டு செல்கிறது என்று இவர்கள் உணர்வுபவர்களாக தெரியவில்லை

தங்களது கோபங்கள் உணர்ச்சிகளை கொட்டி தீர்த்து விட வேண்டும் மற்றவனை அம்பலப்படுத்த வேண்டும் என பதிவிடுவது அவை ஸ்ரீலங்கா அரசுக்கும் சர்வதேச நாடுகளின் முக்கியமாக தாங்கள் வாழும் நாடுகளில் புலனாய்வு பிரிவினருக்கு போய் அவர்களது மீளாக்கத்திற்கே குந்தகமாக இருக்கும் என்ற புறப்பார்வைகளை கணக்கெடுப்பதில்லை

### வாழ்க்கை என்றால் வேதனை பாதி

வேதனை தருவது எதுவென்றால், பிரபாகரனும் அவரது தளபதிகள், போராளிகளின் தியாகங்களும், அர்ப்பணங்களும், பணம் சேர்க்கும் சின்னங்களாக மாறி விட்டதுதான்.

யதார்த்தத்தி பிரபாகரனும் மூத்த தளபதிகளும் போரில் கொல்லப்பட்டு விட்டார்கள். போர் முடிவில் உறவுகளால் கையளிக்கப்பட்டவர்கள் யாவரும் காணாமலாக்கப்பட்டுள்ளார்கள். சிறை வைக்கப்பட்டு, புனர்வாழ்வளிக்கப்பட்டவர்கள், விடுதலையில் முன்னாள் போராளிகளாக மக்களால் அறியப்பட்டவர்களாக இருக்கிறார்கள்.

போர்க்காலத்தில், அன்றில் அதன் முடிவில், வெளியேறியவர்களில் சில பகுதியினரே விடுதலைப் புலிகளுடனான தங்கள் நெருக்கங்களைக் கூறி, அரசியல் முனைப்பை வழி நடத்துபவர்களாக தென்படுகின்றனர். இவர்களை நாட்டில் மக்கள் பெரிதாக அறிந்ததில்லை. புலம்பெயரில் அவர்களது பின்னணியை கண்டுகொள்ள வழிகளும் குறைவு. ஏனெனில் அவர்கள் உலவும் வட்டங்கள் அவர்களுடன் சேர்ந்து குறுகியவையானவையே.

இப்படியான பதிவுகளும் கணினிப் பேச்சுகளும்தான் அவர்களின் வெளிப்படுத்தல்கள்.

பல நாடுகளில் வாழும் பலரைப் பற்றி, அவர்களது பின்னணிகளை நேரடியாகவோ, நம்பிக்கையானவர்கள் மூலமாகவோ அறிந்து கொள்ளாமல், எல்லோரையும் ஒரே சாக்கில் இப்படியான பதிவுகள் மூலம் எடை போடுகின்றேனே என்ற இனம்புரியாத வேதனையும் ஆதங்கமும் எனக்கு உண்டு. இவர்களுக்கும் கோபமும் கருத்துக்களும் இருக்கலாம். அதற்காக மன்னிக்கவும். ஆயின், தமிழ் மக்கள் என்ற நிலையில் நின்று பாரபட்சமாக அவை பேசப்பட வேண்டியவை. இவை பேசப்படாது, நமக்கேன் வம்பு என மறைத்தும், விலக்கியும் போனதுதான் மக்கள் மாத்திரம் அல்லர் அவர்களின் புத்திஜீவிகளும் இழைத்த தவறுகள்.

பேச விழைந்த போது சிலர் 'போடப்பட்டார்கள்'. பின், 'விடுதலைக்காக அவற்றை மறக்க வேண்டாம், விடுதலையின் பின் பேசுவோம்' என்றார்கள். ஆனால் இவையெல்லாம் ஊமைக் காயங்களாகிவிட்டன. அவற்றை திரும்பி வளர இடம்தருவது வேதனைகளைத்தான் மீண்டும் தரும்.

தங்களது எதிர்காலம் எப்படி அமைய வேண்டும், அது எந்த வழி என்பதும், தமிழ் மக்களது கைகளிலேயே உள்ளது.

அவர்கள் இன்றிருக்கும் நிலையிலும், விடுதலைப் புலிகளின் இலட்சியத்தை தொடர்ந்து முன்னெடுக்க விரும்பின், அதற்கு அவர்களின் பெயரில் இயங்கிக் கொண்டிருப்பவர்கள் வெளிப்படையான அரசியல் நிலைப்பாடுகளையும் கட்டமைப்புகளையும் மக்கள் முன் வைத்து, அவர்களது அனுசரணையையும் ஆதரவையும் பெற வேண்டும். ஆனால் இன்றும் பல நாடுகளில் தொடர்ந்தும் பயங்கரவாதிகள் பட்டியலிலேயே இருக்கும் போது, அவர்களோ அவர்கள் பின்னணியில் இருந்து ஆதரவு தரும் கட்டமைப்புகளோ எவ்வாறு சர்வதேச ஆதரவுகளை திரட்டுவார்கள் என்பதையும் மக்களுக்கு விளங்கப்படுத்த வேண்டிய தேவைகள் உள்ளன.

இவ்வளவு நாடுகள் (இலங்கைக்கு) உதவி தந்து, அழைப்புக்கள் தந்த போது, வேறு எந்த நாடும் கூட குரல் எழுப்பவோ உதவிக்கோ வரவில்லை என்பதையும் சிந்திக்க வேண்டும். அதனை நாளை பார்ப்போம்.

(வளரும்...)

# அமைச்சர் டக்ளஸுக்கு இருக்கும் துணிவு பிள்ளையானுக்கு இருக்கிறதா?

## சாணக்கியன் கேள்வி



இரட்டைவேடம் போட்டுக்கொண்டு மட்டக்களப்பு மாவட்ட மக்களை இன்னும் ஏமாற்ற முடியும் என்ற வகையில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கடசி செயற்படுவதாக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார். அமைச்சர் டக்ளஸ் போன்று பிள்ளையான் முதுகெழும்பு உள்ளவரா எனவும் அவர் கேள்வியெழுப்பினார்.

நேற்று மட்டக்களப்பு, களுவாஞ்சிகுடியில் உள்ள அவரது அலுவலகத்தில் செய்தியாளர்களைச் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை தமிழரசுக்கட்சி அனைத்துச் சபைகளிலும் ஆட்சியமைக்கும். அனைத்து பகுதிகளிலும் தமிழரசுக் கட்சிகான ஆதரவு தளம் என்பது அதிகரித்துள்ளது. முன்னாள் அமைச்சரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளருமான பஸில் ராஜபக்ஷ யாழ்ப்பாணத்தில் வீணைச் சின்னத்திலும் கிழக்கில் மட்டக்களப்பில் படகு சின்னத்திலும் பொதுஜன பெரமுன போட்டியிடுவதாக தெரிவித்திருந்தார்.

படகு என்பது மட்டக்களப்பு மாவட்டத்தில் மொட்டின் முகவராகவே உள்ளது என்பதை நாங்கள் காலத்தில் தெரிவித்து வந்திருக்கிறோம்.. பொது ஜன பெரமுனவின் மாவட்ட அமைப்பாளர் சந்திரகுமார் என்பவர் மூன்று பகுதிகளில் போட்டியிடப்போவதாக தெரிவித்திருந்த செய்தி வெளிவந்திருந்தது. வேட்பு மனுக்கான கட்டுப் பணத்தினை அவர் செலுத்தியிருந்தபோதிலும் அவர்கள் வேட்பு மனு தாக்கல் செய்தது தொடர்பில் அறிவிக்கப்படவில்லை. அப்போதே சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. அன்று எழுந்த சந்தேகங்கள் அனைத்தையும் பசில் ராஜபக்ஷ அவர்கள் படகு கட்சியின் ஊடாகத்தான் பொதுஜன பெரமுன கட்சி போட்டியிடுகின்றது என்று கூறி உறுதிப்படுத்தியிருக்கிறார்.

2019ஆம் ஆண்டிலிருந்து நாட்டினை நாசமாக்கிய பொதுஜன பெரமுன கட்சி, நாட்டின் விவசாயிகளை நடுத்தெருவில் கொண்டுவந்துவிட்ட கட்சி, எரிபொருள் தட்டுப்பாட்டை நாட்டில் ஏற்படுத்திய கட்சி, எங்களது பிரதேசத்திலிருந்த மண் வளங்களை கொள்ளையிட்ட கட்சி இந்த பொதுஜன பெரமுன. அந்தக் கட்சியின் ஜனாதிபதி நாட்டினை விட்டு ஓடவேண்டிய சூழ்நிலை மக்களால் ஏற்பட்டது. அக்கட்சியின் பிரதமர் பதவியை இராஜினா செய்த நிலையிலும் அதன் தேசிய அமைப்பாளர் அமெரிக்கா சென்று ஒளிந்த நிலமையும் இந்த நாட்டில் ஏற்பட்டிருந்தது.

பெரமுனவின் காரியாலயம் மட்டக்களப்பு உட்பட அனைத்து பகுதிகளிலும் மக்களினால் அடித்து நொறுக்கப்பட்ட நிலையில் பொதுஜன பெரமுன என்ற கட்சி இங்கு போட்டியிட முடியாத நிலையில் மொட்டு சின்னத்திற்கு பதிலாக படகு சின்னத்தில் களமிறங்கி இந்த மாவட்ட மக்களை ஏமாற்றுவதற்கு சிவநேசதுரை சந்திரகாந்தன் எடுத்த முயற்சியை வன்மையாக கண்டிக்கின்றேன்.

பொதுஜன பெரமுனவில் போட்டியிடுவது என்றால் அதனை தைரியமாக சொல்லுங்கள்.கட்சியின் செயலாளர் சொல்கின்றார் தனித்து படகில் போட்டியிடுகின்றோம் என்று ஆனால் எஜமான் ராஜபக்ஷ கூறுகின்றார் மொட்டு படகில் போட்டி போடுகின்றது என்று.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா போன்று துணிவுடன் நில்லுங்கள், ஒரு முதுகெலும்பு உள்ளவராகயிருங்கள். டக்ளஸ் தேவானந்தா தாங்கள் பொதுஜன பெரமுன கட்சி என்று தைரியமாக ஏற்றுக்கொள்கின்றார்.ஆனால் நீங்கள் மட்டும் இங்கு இரட்டை வேடம் போடுகின்றீர்கள். மட்டக்களப்பு மாவட்ட மக்களை தொடர்ந்து ஏமாற்றமுடியும் என்று நினைக்கின்றீர்களா?.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி எங்களுக்கு போட்டியில்லை.ஆனால் மாவட்ட மக்களை தொடர்ந்த ஏமாற்றமுடியாது. நேற்றைய தினம் வாழைச்சேனை பிரதேச சபையினை தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி இழந்துள்ளது. இது முதலாவது அடியாகும். நாங்கள் நினைத்திருந்தால் வாகரையினையும் கைப்பற்றியிருப்போம். ஆனால் அந்த மக்களால் நீங்கள் துரத்தியடிக்கப்படவேண்டும் என்பதற்காக விட்டிருக்கின்றோம். வட்டாரங்களில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியினர் பிச்சையெடுப்பது போன்று வேட்பாளர்களை தேடி அலைகின்றனர் என தெரிவித்தார்.

### வரத்தகர்களுக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ் மாநகர பொது சுகாதார பரிசோதகர்கள் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது கண்டுபிடிக்கப்பட்ட இந்தக் குற்றங்களை நேற்று நீதிமன்றத்தில் கடை உரிமையாளர்கள் ஏற்றுக்கொண்டனர்.

டிசம்பர் மாதம் 11, திகதிகளிலும் ஜனவரி மாதம் 17, 18ஆம் திகதிகளிலும் இந்தச் சோதனைகள் இடம்பெற்றன.

திகதி காலாவதியான உணவுப்பொருள்கள், பழுதடைந்த உணவுப் பொருள்கள், உரிய முறையில் சுட்டுத்துண்டு இடப்படாத உணவுப் பொருள்கள் மற்றும் வண்டு மொய்த்த உணவு பொருள்கள் என ஏராளமான மனித பாவனைக்கு உதவாத உணவு பொருட்கள் கைப்பற்றப்பட்டன. யாழ்நகர், நல்லூர், வண்ணார்பண்ணை பொது சுகாதார பிரிவுகளில் பொது சுகாதார பரிசோதகர்களின் நடவடிக்கையின்போது இவை கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட உணவு நீதிமன்றில் ஒப்படைத்த பொது சுகாதார பரிசோதகர்கள் 20 கடை உரிமையாளர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தனர்.

வழக்குகள் நேற்று மேலதிக நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது கடை உரிமையாளர்கள் அனைவரும் குற்றத்தை ஏற்று கொண்டனர்.

### சுன்னாகம் வாள்வெட்டு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உட்பட மூவர் நேற்றிரவு சட்டத்தரணி மூலம் பொலிஸாரிடம் சரணடைந்தனர். அவர்களைக் கைது செய்த பொலிஸார் தாக்குத் தொடர்பில் அவர்களிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

செவ்வாய்க்கிழமை பகல் யாழ். மாவட்டம் சுன்னாகத்தில் வீதியில் பயணித்துக் கொண்டிருந்த சுசுக்கி வெகனார் ரக கார் ஒன்றின் மீது டாட்டா கன ரக நடுத்தரக் ட்ரக் ஒன்றால் மோதி விபத்தை ஏற்படுத்தியவர்கள் பின்னர் காரில் இருந்தவர்கள் மீது சரமாரியாக வாள்களால் வெட்டிவிட்டுத் தப்பியோடிவிட்டனர்.

இந்தச் சம்பவத்தை சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குள் இயங்கிவரும் ஜெகன் குழுவினரே மேற்கொண்டனர் என்று பொலிஸார் அடையாளம் கண்டனர். ஜெனக் குழுவின் எதிரியான கனி குழுவின் வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்த விக்டர் என்பவரும் அவரது சகாக்களும் பயணித்த கார் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது.

தாக்குதலை நடத்தியவர்கள் 6 பேர் என்று பொலிஸார் தெரிவித்தனர். தாக்கப்பட்ட நால்வரும் காயமடைந்தனர். அவர்களில் விக்டர் கடுமையான காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்தத் தாக்குதலை நடத்திய குற்றவாளிகளை 24 மணி நேரத்தில் கைது செய்யுமாறு வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் உத்தரவிட்டிருந்தார்.

கைது செய்யப்பட்ட மூவரும் தமக்கும் இந்தச் சம்பவத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் பொலிஸார் தம்மைத் தேடுவதாக அறிந்தே சரணடைந்தனர் என்றும் தெரிவித்தனர்.

### சுயாதீன ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தம்மிகதஸநாயக்க, பதவியணித்தலைமை அதிகாரியும், நாடாளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகமுமான குஷானி ரோஹணதீர ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

அரசமைப்பு உள்ளிட்ட சட்ட ஏற்பாடுகளின் ஊடாக அரசமைப்புப் பேரவைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் பேரவையின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டன.

அரசமைப்பின் 41 ஆ பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆணைக்குழுக்களை உருவாக்குவது தொடர்பில் அரசமைப்புப் பேரவை கலந்துரையாடியிருந்ததுடன், பத்திரிகை விளம்பரங்களின் ஊடாக குறித்த ஆணைக்குழுக்களில் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவதற்கு ஆர்வம் காட்டும் மற்றும் தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருவதற்கும் இணக்கம் காணப்பட்டது.

இதற்கமைய, தேர்தல்கள் ஆணைக்குழு, பொதுச் சேவைகள் ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, கணக்காய்வு சேவை ஆணைக்குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, நிதி ஆணைக்குழு, எல்லை நிர்ணய ஆணைக்குழு மற்றும் தேசிய பெறுகை ஆணைக்குழு ஆகியவற்றுக்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்களைக் கோரி பத்திரிகை விளம்பரங்கள் வெளியிடப்படும். விண்ணப்பங்களை மேற்கொள்வதற்கு விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு இரண்டு வாரகாலம் அவகாசம் வழங்கப்படும்.

மேலும் விண்ணப்பிக்கும் முறை தொடர்பில் மேலதிக தகவல்கள் பத்திரிகை விளம்பரங்கள் ஊடாக அறிவிக்கப்படும்.

பேரவையின் கடமைகள் மற்றும் செயற்பாடுகளைச் சுதந்திரமான முறையிலும், பொறுப்புடனும், வெளிப்படைத்தன்மையுடனும் முன்னெடுத்துச் செல்வதற்கு அரசமைப்புப் பேரவை ஏகமனதாக இணங்கியது.

### கூட்டங்களை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிமுகப்படுத்தப்பட்டுள்ள உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழான வருமானவரிக் கொள்கை எம்மை வெகுவாகப் பாதித்துள்ளது. நாட்டின் நற்பிரஜைகளாக – நாட்டின் அபிவிருத்திக்காக வரி அறவிடப்படுவதை நாம் எதிர்க்கவில்லை. ஆனாலும் இம் மாதம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் வரிக் கொள்கை நியாயமற்றதும், முறையற்றதுமாகும். இதனால் எமது சம்மேளத்தின் உறுப்பினர்கள் பலர் ஏற்றுக் கொள்ள முடியாத அளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அரசாங்கத்தின் வரிக் கொள்கைக்கு மாற்றாகக் கைக்கொள்ளத்தக்க திட்டங்களை எமது சம்மேளனம் அரசாங்கத்துக்கு முன்மொழிந்திருந்தது. ஆனால் அவற்றுக்கு அரசாங்கத் தரப்பிடமிருந்து எந்தவிதமான பதில்களும் கிடைக்கவில்லை. இது பற்றி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் இலங்கைப் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் மற்றும் பணிப்பாளர்கள் சபையின் தலைவர் ஆகியோருக்கும் எழுத்து மூலம் அறிவித்திருந்தோம்.

இதனால், சட்ட ரீதியாக எமது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காகவும், அரசாங்கத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் நாம் தொழிற்சங்க நடவடிக்கைகளை தொடங்க வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளோம். கடந்த 24.01.2023 அன்று கூடிய எமது பிரதிநிதிகள் சபை இன்றிலிருந்து மறு அறிவித்தல்வரை எமது உறுப்பினர்கள் பல்கலைக் கழகங்களில் நடக்கும் எந்தவொரு கூட்டத்திலும் பங்குபற்றுவதில்லை என்று முடிவு செய்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

### பொருளாதார .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மருத்துவ பொருள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான உத்தரவாதத்தை பெறுவதற்கு தான் முயன்று வருவதாகவும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கை மருந்துகள் மற்றும் சத்திர கிசிச்சை உபகரணங்களை இறக்குமதி செய்வதற்கு வருடாந்தம் 300 மில்லியன் டொலர்கள் தேவை. ஆனால் 2023ஆம் ஆண்டின் முதல் மாதத்தில் நாட்டுக்குக் கிடைத்துள்ள நிதி உதவி வெறும் 80 மில்லியன் டொலர்களே. அதுவும் உதவி வழங்கும் அமைப்புக்கள் ஊடாகக் கிடைத்த பணம்.

அத்தியாவசிய மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு இலங்கைக்கு இன்னமும் 220 மில்லியன் அமெரிக்க டொலர் தேவையாகவுள்ளது இந்த இடைவெளியை அவசரமாக நிரப்பவேண்டிய தேவையுள்ளது எனவும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

பொருளதார நெருக்கடி சுகாதார துறைக்கு பல சவால்களை அளித்துள்ளது எனத் தெரிவித்துள்ள சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தன மருந்துகள் மற்றும் மருந்துப் பொருட்களின் விநியோகத்தை வலுப்படுத்துவதற்கும் சமூகம் நெருக்கடியான நிலையை எதிர்கொள்வதற்கு உதவுவதற்கும் நாங்கள் இலங்கையின் நண்பர்களது உதவியைப் பெறவேண்டியுள்ளது எனத் தெரிவித்தார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622

நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 தை 11 புதன்கிழமை 25.01.2023 கதிர் 330

## ரூ. நான்கரை கோடி பொறுமதியான தங்கத்துடன் இரு பெண்கள் கைது

இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு சுமார் 4.5 கோடி ரூபா பெறுமதியான தங்கத்தை கடத்திச்சென்ற 2 பெண்களை அந்நாட்டு சுங்கத்தினர் கைது செய்துள்ளனர்.

கொழும்பிலிருந்து சென்னை வந்த விமானத்தில் இருந்த 2 பெண்களிடம் அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

9

## 6 பொருட்களின் விலைகள் திடீர் குறைப்பு!

லங்கா சதொச 6 அத்தியாவசிய பொருட்களின் விலைகளைக் குறைக்கத் தீர்மானித்துள்ளது.

அதன்படி, நாளை முதல் செத்தல் மிளகாய், அரிசி, பருப்பு உள்ளிட்ட 6 பொருட்களின் விலைகள் குறைக்கப்படுகின்றன.

அனைத்து லங்கா சதொச விற்பனைக் கிளைகளிலிருந்தும் குறைக்கப்பட்ட விலைகளில் பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று சதொச அறிவித்துள்ளது.

2

# யாழ். மேயர் தெரிவை எதிர்க்கும் மனு மீது 6ஆம் திகதி விசாரணை

## பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை வழங்க மேல் நீதிமன்றம் கட்டளை

(ந.லோகதயாளன்).

யாழ்ப்பாணம், ஜன.25

யாழ்ப்பாணம் மாநகர முதல்வராக இ.ஆனல்ட் தேர்வானமை சட்ட விரோதமானது என உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட யாழ்ப்பாண மேல் நீதிமன்றம் வழக்கை பெப்ரவரி 6ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்வதாக அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபன் சார்பில் சட்டத்தரணி றமணனால் தாக்கல் செவ்வாய்க்கிழமை தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரணைக்கு ஏற்றுக்கொள்ள முடியுமா என்று இன்று காலை ஆராய்ந்து நீதிமன்றம். மனுதாரர் சார்பில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ள 48 பேருக்கும் அழைப்பாணை அனுப்பவும் உத்தரவிட்டது.

யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வராக இருந்த வி.மணிவண்ணன் மாநகர முதல்வர் பதவியில் இருந்து தான் டிசெம்பர் 31ஆம் திகதி முதல் விலகுகிறார் என்று வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரிற்கு அறிவித்தார். இதனால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு ஜனவரி 19 புதிய முதல்வர் தெரிவு நடத்தப்பட்டது.

புதியமுதல்வரைத்தெரிவுசெய்வதற்கான கூட்டம் தொடங்கியப 24 உறுப்பினர்கள் இருந்தார்கள். கூட்டத்தை தொடர்ந்து நடத்த போதிய நிறைவெண் இருப்பதாக அறிவிக்கப்பட்டது. தமிழ் அரசுக் கட்சி சார்பில் இ.ஆனல்ட்டின் பெயர்

2

# ஜனாதிபதி தலைமையில் நாளை சர்வகட்சிக் கூட்டம்

## நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சிகளின் தலைவர்களுக்கும் அழைப்பு



நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளின் தலைவர்கள் கலந்துகொள்ளும் சர்வகட்சிக் கூட்டம் நாளை (26) மாலை 4 மணிக்கு ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

2

# மாவீரர் கல்வெட்டு தமிழ்நாட்டிலும் இடித்தழிப்பு



(ந.லோகதயாளன்)

இந்தியாவின் தமிழ்நாட்டில் காணப்பட்ட விடுதலைப் புலிகளின் மாவீரர் லெப்ரினன்ட் போசனின் கல்லறை இடித்தழிக்கப்பட்டிருக்கிறது.

போராளியின் கல்லறையைத் தி.மு.க அரசு இடித்தழித்துள்ளதாக தமிழர் நல பேரியக்கத்தின் தலைவர் மு.களஞ்சியம் குற்றஞ்சாட்டியுள்ளார். கல்லறை இடுகாட்டில் இருந்தது என்றும் அங்கு அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும்போது இடிக்கப்பட்டதாகவும் அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

2

# கோட்டாபயவை விரட்ட அமைச்சர்களும் சூழ்ச்சி

## 'மொட்டு'வின் செயலர் சாகர பகிரங்கக் குற்றச்சாட்டு



கோட்டாபய ராஜபக்சவை ஜனாதிபதி பதவியிலிருந்து விரட்டியடிப்பதற்கு அப்போதைய அமைச்சர்கள் சிலரும் சூழ்ச்சி செய்தனர்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் குற்றம் சாட்டினார்.

மக்கள் விடயங்களைத் தற்போது

9

## யாழ்ப்பாண மாநகர சபைக்கான

# முதன்மை வேட்பாளரை அறிவித்தது காங்கிரஸ்

யாழ்ப்பாணம் மாநகர சபையில் தமது கட்சியின் சார்பில் போட்டியிடும் முதன்மை வேட்பாளரை தமிழ்க் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

முக்கியமான கால கட்டங்களில் கட்சியுடன் இணைந்து செயற்பட்டவரான தீபன் திலீசனை முதல்வர் பதவிக்கு நிறுத்துவது என கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளதாக அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

பிரதி முதல்வர் பதவிக்கு கட்சியின் நீண்ட கால உறுப்பினரான வை.கிருபாகரன் நிறுத்தப்படுகிறார் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் நிறைவடைந்த நிலையில் வாக்களிப்புக்கான திகதி மார்ச் 9 என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. இந்த நிலையில் வடக்கு கிழக்கில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்குப் போட்டியிடும் கட்சிகள்

2

# தூக்கி வீசப்பட்ட பச்சிளம் சிசு சாவு தாய் என கூறி 15 வயது சிறுமி கைது

## கர்ப்பமாக்கிய சந்தேகத்தில் இளைஞரும் கைது

மட்டக்களப்பு, ஏறாவூர் பிரதேசத்தில் பாழடைந்த காணியில் இருந்து சிசு ஒன்றின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. சிசுவைப் பிரசவித்துப் பின் கொன்று புதைத்தார் என்று சந்தேகிக்கப்படும் 15 சிறுமியையும், அந்தச் சிறுமியைக் கர்ப்பமாக்கினார் என்று சந்தேகிக்கப்படும் 29 வயதுடைய

2

## முதன்மை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தந்த சபைகளுக்கு யாரை முதன்மை வேட்பாளர்களாக நிறுத்துகின்றார்கள் என்பதை அறிவிக்கவில்லை.

தேர்தல் முடிந்த பின்னர் அது குறித்துத் தீர்மானிக்கப்படும் என்றே கட்சிகள் கூறிவருகின்றன. குறிப்பாகக் கூட்டுச் சேர்ந்து போட்டியிடும் கட்சிகள் யார் முதன்மை வேட்பாளர் என்பதை வெளிப்படுத்த மறுக்கின்றன. தேர்தலுக்கு முன்னரே அவ்வாறு செய்ய முயன்றால் அது கூட்டுக்குள் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கக்கூடும் என்பதால் கட்சிகள் முதன்மை வேட்பாளரை அறிவிப்பதைத் தவிர்ப்பதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இத்தகைய பின்னணியிலேயே தமிழ்க் காங்கிரஸ் மாநகர சபைக்கான தனது முதன்மை வேட்பாளர்களை அறிவித்துள்ளது. அந்தக் கட்சியும் ஏனைய சபைகளுக்கான முதன்மை வேட்பாளர்கள் யார் என்பதை அறிவிக்கவில்லை.

இது தொடர்பான அறிவிப்பை விடுக்கும் செய்தியாளர்கள் கூட்டத்தில் பேசிய காங்கிரஸ் தலைவர் கஜேந்திரகுமார், தமது கட்சியின் அரசியல் பாதையை தமக்கு எதிரான தரப்புக்கள்கூட ஏற்றுக்கொள்ளும் நிலமை ஏற்பட்டுள்ளது என்றும் அத்தகைய ஒரு தரப்பால் மட்டுமே யாழ். மாநகர சபையில் ஊழலற்ற ஆட்சியைத் தரமுடியும் என்றும் தெரிவித்தார்.

இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மக்கள் தமது பிரதேச அபிவிருத்திக்காக வாக்களித்தாலும்கூட தேர்தல் முடிந்த பின்னர் அரசியல் கட்சிகள் தேர்தல் முடிவைத் தமது கட்சிக்கான மக்களின் அங்கீகாரமாகவே காட்ட முற்படுவார்கள் என்றும் அவர் கூறினார்.

இந்தத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சியையோ ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியையோ தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியையோ மக்கள் ஆதரித்தால் அது தமிழ் மக்களுக்கான தீர்வை ஒற்றையாட்சிக்குள் முடக்குவதற்கான வேலைத் திட்டத்தை அங்கீகரித்ததாகிவிடும் - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## 6 பொருள்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய விலைகள் வருமாறு:-

செத்தல் மிளகாய் - 1700 ரூபா (30 ரூபா குறைப்பு)

வெள்ளைப் பச்சையரிசி -169 ரூபா (10 ரூபா குறைப்பு)

சிவப்பரிசி - 179 ரூபா (8 ரூபா குறைப்பு)

வெள்ளை நாடு (உள்நாடு) - 184 ரூபா (5 ரூபா குறைப்பு)

சிவப்பு பருப்பு - 365 ரூபா (5 ரூபா குறைப்பு)

கீரி சம்பா - 235 ரூபா (4 ரூபா குறைப்பு)

## யாழ்.மேயர்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்மொழியப்பட்டது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து 4 உறுப்பினர்கள் கூட்டத்தில் இருந்து வெளியேறினர்.

இதையடுத்து கூட்டத்தைத் தொடர்ந்து நடத்தப் போதிய நிறைவெண் இல்லை என்று குறிப்பிட்ட வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செ.பிரணவநாதன் புதிய முதல்வரைத் தெரிவு செய்வதற்கான புதிய திகதி பின்னர் வெளியிடப்படும் என்று அறிவித்தார். இருப்பினும் இரண்டு நாட்களின் பின்னர் ஆனல்ட் முதல்வராகப் போட்டியின்றித் தெரிந்தெடுக்கப்பட்டார் என்று அவரே வர்த்தமானி மூலம் அறிவித்தார்.

இதனை எதிர்த்தே முன்னாள் முதல்வர் மணிவண்ணன் அணியைச் சேர்ந்த மாநகர சபை உறுப்பினரான வ.பார்த்தீபன் மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார்.

உள்ளூராட்சி சபைகள் சட்டப்படி இரண்டு தடவைகள் வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டதால் பதவி வறிதாக்கப்பட்ட ஒருவர் மீண்டும் அதே பதவிக்குப் போட்டியிட முடியாது, போதிய நிறைவெண் இல்லை என்று முதல்வர் தெரிவை ஒத்தி வைப்பதாகத் தெரிவித்த ஆணையாளர் பின்னர் வர்த்தமானி மூலம் தெரிவை அறிவித்தது தவறானது, ஆணையாளர் கூட்டத்தை ஒத்தி வைக்காமல் இருந்திருந்தால் முதல்வர் தெரிவுக்கு வேறு பெயர்களும் முன்மொழியப்பட்டு போட்டி ஏற்பட்டிருக்கும், உள்ளிட்ட பல்வேறு விடயங்களும் நீதிமன்றத்தில் மனுதாரர் தரப்பால் சுட்டிக்காட்டப்பட்டது.

## மாவீரர் கல்வெட்டு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தஞ்சாவூர் வடக்கு வாசல் பகுதியில் உள்ள நாத்திகர் இடுகாட்டிலேயே இந்தக் கல்லறை இருந்தது. 1989ஆம் ஆண்டு திராவிடர் கழகத்தின் அப்போதைய பொதுச் செயலாளர் (இன்று தலைவர்) கி.வீரமணியினால் இந்தக் கல்லறை அமைக்கப்பட்டிருக்கின்றது.

"தமிழீழ விடுதலைப் புலி போசன் கல்வெட்டு" என்று எழுதப்பட்டுள்ள அந்தக் கல்லறை மட்டக்களப்பு முகத்துவாரம், கோயிலடியைச் சேர்ந்த பஞ்சலிங்கம் சிவகுமார் நினைவாக எழுப்பப்பட்டிருந்தது.

சண்டையில் விழுப்புண் அடைந்த போசன் தமிழ்நாட்டில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தபோது தமிழ்நாடு காவல் துறையினரால் கைதுசெய்யப்படும் நிலை இருந்தது. அதற்கு மறுத்து சயனைக் குப்பியைக் கடித்து அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றார். அவர் நினைவாக வைக்கப்பட்டிருந்த கல்வெட்டே இப்போது இடித்தழிக்கப்பட்டிருக்கின்றது. இந்தத் தூபியை எழுப்பிய கி.வீரமணி தற்போதைய தமிழ்நாடு ஆளும் கட்சியான திமுகவிற்கு நெருக்கமானவர்.

## தூக்கி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞரையும் ஏறாவூர் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஏறாவூர் சுகாதாரத்துறையில் டெங்கு ஒழிப்புப் பிரிவில் கடமையாற்றி வரும் சந்தேகநபர், அந்தப் பகுதியிலுள்ள வீடுகளுக்குச் சோதனை நடவடிக்கைக்காகச் சென்ற நிலையில் சிறுமியுடன் காதல் வயப்பட்டார் என்றும்

அந்தத் தொடர்பு சிறுமி கர்ப்பமாகும் நிலையை ஏற்படுத்தி இருக்கிறது என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பிறந்த சிசுவைக் கழுத்து நெரித்துக் கொலை செய்த சிறுமி, சடலத்தை வீட்டின் முன்னால் உள்ள பாழடைந்த காணியில் வீசினார் என்று பொலிஸார் கூறுகின்றனர். கைது செய்யப்பட்ட சிறுமி பொலிஸ் பாதுகாப்புடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சிசுவின் சடலம் பிரேதபரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறும், இந்தச் சர்வகட்சிக் கூட்டத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, பிரதமர் தினேஷ் குணவர்த்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் உட்பட நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளின் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர், 2022 டிசம்பர் 13 ஆம் திகதி நடத்தப்பட்ட சர்வகட்சித் தலைவர்களின் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட நல்லிணக்கத்தை மேம்படுத்தும் வேலைத்திட்டம் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டு கட்சித் தலைவர்களின் இணக்கப்பாடு இந்தக் கூட்டத்தில் எட்டப்படவுள்ளது என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நிலை தளம்பக்கூடாது!

சில சமயங்களில் அரசியல் தலைவர்களுக்குத் தாம் என்ன செய்கிறோம் என்பது புரிந்திருக்கிறதா என்பது தெரியவில்லை. மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நடவடிக்கைகள் தொடர்பில் கடந்த இரு வாரங்களில் வெளியான செய்திகள் அவர் நிதானத்துடன் இருக்கிறாரா என்கிற கேள்வியை எழுப்புகின்றன.

இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக கடற்படை மற்றும் திணைக்கள அதிகாரிகளுடன் நடந்த கூட்டத்தில், இந்திய மீன்பிடி விசைப் படகுகள் எல்லை மீறுவதைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறு கடற்படையினரிடம் வலியுறுத்தியிருந்தார்.

நூற்றுக்கணக்கான இந்திய விசைப்படகுகள் எல்லை மீறுகின்றபோதும் அவற்றுக்கு எதிராக கடற்படையினரின் நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை என்றும் அமைச்சர் குறைப்பட்டிருக்கிறார். இதற்குக் காலநிலை சீரிமையைக் காரணம் காட்டிய கடற்படை அதிகாரி விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்துள்ளார்.

இந்த விவரங்கள் எல்லாம் அமைச்சரின் ஊடக இணைப்பாளரால் அனுப்பப்பட்ட செய்திக் குறிப்பில்தான் இருக்கின்றன. அதில் மற்றொரு விடயமும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் போன்ற குறுகிய அரசியல் நோக்கம் கொண்டவர்களால் இந்திய கடற்றொழிலாளர்களின் விவகாரத்தை தவறாகப் பயன்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில் நாடுகளுக்கு இடையேயான அசௌகரியங்களை உருவாக்கக்கூடிய எந்தவிதமான செயற்பாடுகளையும் அனுமதிக்க முடியாது என்று அமைச்சர் அந்தக் கூட்டத்தில் குறிப்பட்டார் எனவும் செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருந்தது.

ஒரு வாரத்திற்கு முன்னர்தான் அவரது அலுவலகம் முன்பாகப் போராட்டம் நடத்திய குருநகர் மீனவர்கள் மத்தியில் உரையாற்றிய அமைச்சர் இந்திய மீனவர்களின் படகுகளை இடிக்கவும் அவர்களைப் பிடிக்கவுமென யாழ்ப்பாண மீனவர்களுக்குத் தான் இந்திய மீனவரின் பறிமுதல் செய்யப்பட்ட இரும்புப் படகுகளைத் தருவேன் என்று பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

குருநகர் மீனவர்களுக்கு அத்தகைய இரு படகுகளைத் தான் அடுத்த வாரமே தருவார் என்றும் (இன்னும் கொடுக்கவில்லை என்பது மற்றொரு விடயம்) அதைக் கொண்டு இந்திய மீனவர்களின் படகுகளை இடிப்பதுடன் அவர்களைப் பிடித்துவரும் படியும் யாழ்ப்பாண மீனவர்களைத் தூண்டிவிட்டவர் அமைச்சர்தான்.

அத்தகையதொரு அசம்பாவிதம் நடந்தால் அது இரு நாடுகளின் உறவுகளிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதுடன் பாக்கு நீரிணையின் இரு கரைகளிலும் இருக்கும் தொப்புள்கொடி உறவுகளான தமிழர்கள் மத்தியிலும் பெரும பிளவை உருவாக்கும்.

அமைச்சர் இந்த விடயங்கள் அறியாதவரோ புரியாதவரோ இல்லை. தேர்தல் நேரத்தில் மீனவர்களை உசுப்பேற்றிவிடும் வகையில் பகிரங்கமாக அத்தகைய அறிக்கையைவிட்டுவிட்டு இப்போது– இரு நாடுகளின் உறவுகளுக்குள் அசௌகரியங்களை உருவாக்கக்கூடிய எந்த நடவடிக்கையையும் அனுமதிக்க முடியாது என்று பழியை வேறு யார் மீதோ தூக்கிப் போடப்பார்க்கிறார்.

அவர் தெரிவித்த கருத்துக்கள்தான் அவர் குறிப்பிடும் அசௌகரியங்களை ஏற்படுத்தும். கீழ் மட்டங்களில் ஏற்படுத்தியுமிருக்கின்றன. எனவே தான் ஏற்படுத்திய அசௌகரியத்தை அடுத்தவர் மீது பழிபோட்டு தட்டிக்கழிப்பதை விட்டுவிட்டு, யாழ்ப்பாணம் வரும் தமிழக மீனவர் பிரதிநிதிகளுடன் பேசி நிலமையைச் சுமகமாக்க மயலவேண்டும்.

# பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாண அனைத்து அரசியல் கட்சிகளுடன் பேச்சு!

### என்கிறார் பாலித ரங்கே பண்டார



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் மாத்திரம் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும். ஆகவே நாட்டு மக்கள் அனைவரும் அவரைப் பலப்படுத்தும் வகையில் அரசியல் தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண அனைத்து அரசியல் கட்சிகளுடன் பேச்சில் ஈடுபட்டுள்ளோம் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

தேசிய தேர்தல்கள் ஆணைக் குழுவின் உறுப்பினர்களுக்கும், அரசியல் கட்சி கட்சிகளின் செயலாளர்கள், பிரதிநிதிகள் மற்றும் சுயாதீன குழுக்களின் பிரதிநிதிகளுக்கு இடையிலான சந்திப்பு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் இடம்பெற்றது. இந்த பேச்சின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

தேர்தல் செலவீனம் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் இடம்பெற்ற பேச்சு சாதகமாக உள்ளது. ஊழலற்ற வகையில் சுதந்திரமான முறையில் தேர்தலை நடத்த அரசியல் கட்சிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என ஆணைக்குழு அரசியல் கட்சிகளிடம் வலியுறுத்தியது.

தேர்தல் உரிய தினத்தில் நடத்தப்படும் என ஆணைக்குழுவின் தலைவர், உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். தேர்தலுக்கான நடவடிக்கைகள் தொடர்பில் இன்னும் ஓரிரு நாள்களில் விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் என ஆணைக்குழு குறிப்பிட்டது.

பொருளாதார நெருக்கடிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் மாத்திரம் தீர்வு காண முடியும். ஆகவே நாட்டு மக்கள் அரசியல் ரீதியில் அவரை பலப்படுத்த வேண்டும். பொருளாதார நெருக்கடிக்கு வெகு விரைவில் தீர்வு காண்பது அவசியமாகும்.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பது தொடர்பில் அனைத்து அரசியல் தரப்பினருடன் பேச்சில் ஈடுபட்டுள்ளோம். பொருளாதார நெருக்கடியுடன்தான் போட்டி உள்ளதே தவிர, அரசியல் தரப்பினருடன் எவ்வித போட்டியும் இல்லை. – என்றார்.

# 140 அத்தியாவசிய மருந்துகளுக்கு நாட்டில் கடுமையான தட்டுப்பாடு!

புற்றுநோயாளிகளுக்கு வழங்கப்படும் 43 மருந்துகள் உட்பட 140 இற்கும் மேற்பட்ட அத்தியாவசிய மருந்துகளுக்குகடுமையானபற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மருந்துப் பற்றாக்குறையால் சுகாதாரப் பணிகள் முடங்கியதுடன், நோயாளிகளும் கடும் சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர்.

எவ்வாறாயினும் தட்டுப்பாடு உள்ள மருந்துகளைக் கொள்வனவு செய்ய உத்தரவுகள் வழங்கப்பட்ட போதும் பணம் செலுத்துவதில் சிக்கல்கள் இருப்பதாக சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக சந்திரகுப்த தெரிவித்தார்.

இந்தியக்கடன்வரியின்கீழ்முன்பதிவு செய்யப்படும் புற்று நோயாளர்களுக்கு வழங்கப்படும் 43 மருந்துகள் இன்னும் 15 நாள்களில் இலங்கையை வந்தடையும் என்று அவர் குறிப்பிட்டார்.

பற்றாக்குறையாக உள்ள எஞ்சிய மருந்துகளை இறக்குமதி செய்யத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

# தேர்தல் நடவடிக்கைகளுக்கு போதிய உதவிகளை வழங்குக!

### மத்திய வங்கி ஆளுநரிடம் கோரிக்கை

தேர்தல் நடவடிக்கைகளுக்கு போதியளவு உதவிகளை வழங்குமாறு கோரி மத்திய வங்கி ஆளுநருக்கு தேர்தல்கள் ஆணைக்குழு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

எரிபொருள் மற்றும் மின்சாரத்தை தொடர்ச்சியாக வழங்குவதற்கு இலங்கை மின்சார சபை மற்றும் பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு தேவையான பணத்தை வழங்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சி ஹேவா கோரிக்கை விடுத்துள்ளார்.

உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால், இதுதொடர்பில் உயர் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்படும் எனவும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொழும்பு மற்றும் புத்தளம் பகுதிகளில் 3 வாரத்தில் அதிக டெங்கு நோயாளர்!

கடந்த மூன்று வாரங்களில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் கொழும்பு மற்றும் புத்தளம் மாவட்டங்களில் பதிவாகியுள்ளனர்.

கொழும்பில் 640 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் எனவும் புத்தளத்தில் 625 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் சுகாதார அமைச்சின் தொற்றுநோய் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, கம்பஹாவில் 412 பேரும், கல்முனையில் 369 பேரும், யாழ்ப்பாணத்தில் 343 பேரும் பதிவாகியுள்ளனர்.

இந்த ஆண்டு இதுவரை நாடு முழுவதிலும் இருந்து 4,090 சந்தேகத்துக்கிடமான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்,

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# 2019இல் இந்தியா, பாகிஸ்தான் நாடுகள் அணு ஆயுதப் போருக்கு தயாராயிருந்தன

## அமெரிக்க முன்னாள் அமைச்சர் தனது புத்தகத்தில் தெரிவிப்பு

பாகிஸ்தானும் இந்தியாவும் 2019ஆம் ஆண்டு அணு ஆயுதப் போரில் ஈடுபடத் தயார் நிலையில் இருந்ததாக அமெரிக்க முன்னாள் அயலுறவுத் துறை அமைச்சர் மைக் பாம்பியோ அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளார்.

அமெரிக்க அதிபராக டொனால்ட் டிரம்ப் இருந்தபோது அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சராக 2018 முதல் 2021வரை இருந்தவர் மைக் பாம்பியோ. தனது அனுபவங்கள் தொடர்பாக இவர் எழுதி சமீபத்தில் வெளியான ஒரு அங்குலத்தைக்கூட விடமுடியாது: என் அன்புக்குரிய அமெரிக்காவுக்கான மோதல் (Never Give an Inch: Fighting for the America I Love) எனும் புத்தகத்தில், 2019ஆம் ஆண்டு பாகிஸ்தானும் இந்தியாவும் அணுஆயுத தாக்குதல் நடத்த இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

2019 பெப்ரவரி மாதம் பாகிஸ்தானைச் சேர்ந்த ஜெய்ஷ் இ முகம்மது பயங்கரவாத அமைப்பு, ஜம்மு காஷ்மீரின் புல்வாமாவில் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்த துணை ராணுவப் படையினரை குறிவைத்து தாக்குதல் நடத்தியது. இதில் 40 துணை ராணுவத்தினர் உயிரிழந்தனர். இதற்குப் பதிலடி கொடுக்கும் நோக்கில், பாகிஸ்தானின் பாலாகோட் பகுதியில் உள்ள ஜெய்ஷ் இ முகம்மது பயங்கரவாத அமைப்பின் முகாம் மீது இந்திய ராணுவம் வான் தாக்குதல் நடத்தியது. இதையடுத்து, இந்தியா - பாகிஸ்தான் இடையே



பதற்றம் அதிகரித்தது.

இந்த சம்பவத்தை குறிப்பிட்டு எழுதியுள்ள மைக் பாம்பியோ, "2019ம் ஆண்டு பெப்ரவரியில் பாகிஸ்தானும் இந்தியாவும் அணு ஆயுதப் போரை நடத்த இருந்த விவகாரம் உலகிற்கு எந்த அளவுக்குத் தெரியும் என்பது எனக்குத் தெரியாது. ஆனால், இந்த இரு நாடுகளும் அணு ஆயுத போரை நெருங்கியிருந்தன.

அது எனக்கு நன்கு தெரியும். அப்போது நான் வியட்னாமின் ஹனோய் நகரில் இருந்தேன். பாகிஸ்தானின் தளர்வான பயங்கரவாத எதிர்ப்பு கொள்கை காரணமாக 40 இந்தியர்கள் கொல்லப்பட்டனர். இதற்கு பதிலடியாக இந்தியா, பாகிஸ்தானுக்குள் சென்று பயங்கரவாதிகளுக்கு எதிராக தாக்குதல் நடத்தியது. அப்போது பாகிஸ்தானியர்கள் இந்திய வான்படை விமானத்தை சுட்டனர். இதில், இந்திய விமானி பிடிபட்டார்.

உடனடியாக நான் இந்திய அயலுறவு அமைச்சரிடம் (சுஷ்மா ஸ்வராஜ்) பேசினேன். அப்போது அவர், இந்தியா மீது பாகிஸ்தான் அணு ஆயுத தாக்குதல் நடத்த திட்டமிட்டு அதற்கான பணிகளில் ஈடுபட்டு வருவதாக தங்களுக்கு தகவல் கிடைத்துள்ளது என்றும், எனவே, இந்தியா தனக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறது என்றும் குறிப்பிட்டார். அப்போது நான், எதையும் செய்துவிடாதீர்கள்; எனக்கு ஒரு நிமிடம் மட்டும் தாருங்கள் என்று கூறிவிட்டு, உடனடியாக பாகிஸ்தானின் உண்மையான தலைவராக இருந்த கமர் ஜாவெத் (ராணுவ தலைமை தளபதி இடம் பேசினேன்.

இந்திய வெளியறவு அமைச்சர் கூறியதை அவரிடம் தெரிவித்தேன். அப்போது அவர் அது உண்மை அல்ல எனத் தெரிவித்தார். அதோடு, இந்தியாதான் பாகிஸ்தான் மீது அணு ஆயுத போரை நடத்த தயாராகி வருவதாகவும் அவர் புகார் தெரிவித்தார். இரு நாடுகளுமே மற்றொரு நாட்டுக்கு எதிராக அணு ஆயுத போரை நடத்தும் எண்ணம் கொண்டிருக்கவில்லை என்பதை புரிய வைக்க எனக்கு சில மணி நேரம் தேவைப்பட்டது." என தெரிவித்துள்ளார். மைக் பாம்பியோவின் இந்த தகவலுக்கு இந்திய, பாகிஸ்தான் அயலுறவு அமைச்சகங்கள் உடனடியாக மறுப்பு தெரிவிக்கவில்லை

## தலைமைப் பொறுப்பு வகித்தது எனக்கு கிடைத்த பெரும் கொடை

### பதவி விலகும் நியூஸிலாந்து பிரதமர் நெகிழ்ச்சி

நியூஸிலாந்து பிரதமராக ஜெசிந்தா ஆர்டன் செவ்வாய்க்கிழமை கலந்துகொண்ட பொது நிகழ்ச்சியில், நாட்டின் தலைமைப் பொறுப்பை வகித்தது தனக்குக் கிடைத்த மிகப் பெரிய பெருமை என்று நெகிழ்ச்சியுடன் கூறினார்.

வெலிங்கடனில் ஆளும் தொழிலாளா கட்சி நடத்திய கூட்டத்தில் புதிய பிரதமராக தோவு செய்யப்பட்ட கிறிஸ் ஹிப்கின்ஸ் மற்றும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பங்கேற்ற அவா பின்னர் செய்தியாளாகளிடம் பேசினார்.

"எனது பதவி விலகல் குறித்து எதிர்மறைக் கருத்துகளை யாரும் பரப்ப வேண்டாம். மன நிறைவுடன்தான் இந்தப் பணியிலிருந்து விலகுகிறேன்.

புதிய பிரதமா கிறிஸ் ஹிப்கின்ஸ் எனது 20 ஆண்டு கால நண்பா. தகுதி வாய்ந்த கரங்களில் நாட்டை ஒப்படைத்துச் செல்வதில் மகிழ்ச்சியடைகிறேன்" என்றார்.

2017-ஆம் ஆண்டியிலிருந்து நியூஸிலாந்தின் பிரதமராக இருந்து வரும் ஜெசிந்தா ஆர்டன், தனது பதவியிலிருந்து விலகுவார் என்று கடந்த வியாழக்கிழமை திடீரென அறிவித்து நாட்டு மக்களை அதிர்ச்சியடையச் செய்தார்.

பிரதமா பதவியை வகிப்பதற்கான சூழல் தனக்கு இனிமேல் இல்லை என்பதை உணாந்ததால் அந்தப் பதவியிலிருந்து விலகத் தான் முடிவு செய்தார் என்று ஜெசிந்தா கூறினார்.

நியூஸிலாந்து பிரதமராக ஜெசிந்தா ஆர்டன் பதவியேற்றபோது அவருக்கு 37 வயது. அப்போது, ஒரு நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்ற உலகின் மிக இளைய வயது பெண் என்ற பெருமையை ஜெசிந்தா பெற்றார்.

மிகக் கடுமையான கொரோனா நெருக்கடி, நாடு அதுவரை சந்தித்திராத மிக மோசமான கிறைஸ்ட்சாச் மசூதித் தாக்குதல், பொருளாதார நெருக்கடிக்கு இடையே அவா நாட்டை சிறப்பாக வழிநடத்திச் சென்றாா் என உலகத் தலைவர்களால் பாராட்டப்பட்டார்.

எனினும், பெண் என்பதாலும், பிற காரணங்களுக்காகவும் தொடாந்து நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டு வந்ததால்தான் அவா பதவி விலக முடிவு செய்யப்பட்டதாகக் கூறப்பட்டது. அதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் செய்தியாள்களிடம் ஜெசிந்தா இவ்வாறு கூறினார்.

## வடகொரியாவில் கொரோனா தீவிரம் தலைநகரில் பொது முடக்கம் அமுல்

கொரோனா நோய்த் தொற்று அதிகரிப்பால் வடகொரியா தலைநகரில் பொது முடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

வடகொரியா தலைநகர் பியோங்யாங்கில் மூச்சுத்திணறல் நோயால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், ஞாயிற்றுக்கிழமை வரை வீட்டை விட்டு யாரும் வெளியே வரவேண்டாம் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் 2020 முதல் கொரோனா நோய்த் தொற்றால் பாதித்து பெரும் இழப்பை சந்தித்த நிலையில், வடகொரியாவில் கொரோனா பாதிப்பு ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கடந்தாண்டு முதல் முறையாக வடகொரியாவில் கொரோனா நோய் பரவியுள்ளதாக தகவல்கள் வெளியாகின. இருப்பினும், ஓகஸ்ட் மாதமே கொரோனாவை வென்றுவிட்டதாக வடகொரியா அறிவித்தது.

இந்நிலையில், கடந்த சில நாள்களாகவே பியோங்யாங் நகரில் காய்ச்சல் மற்றும் மூச்சுத்திணறல் நோயால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இதனால், பியோங்யாங் முழுவதும் இன்று முதல் 5 நாள்களுக்கு பொதுமுடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், மக்கள் வீட்டைவிட்டு வெளியே வராமல் வெப்ப நிலையை பரிசோதனை செய்யவும் அரசு உத்தரவிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

பியோங்யாங் நகரை தொடர்ந்து வடகொரியாவின் பல்வேறு பகுதிகளில் அடுத்தடுத்து பொதுமுடக்கம் நடைமுறைக்கு வர வாய்ப்புள்ளதாகவும் தெரிகிறது.

## நேபாளத்தில் நிலநடுக்கம் ஒருவர் சாவு

நேபாளத்தில் செவ்வாய்க்கிழமை ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் ஒருவா உயிரிழந்தார்.

சுதூர்பஸ்சிம் மகாணம், பஜூடா மாவட்டத்திலுள்ள மேளா என்னுமிடத்தில் மதியம் 2.43 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டா அளவு கோலில் இந்த நிலநடுக்கம் 5.9 அலகுகளாகப் பதிவானது. இந்த நிலநடுக்கத்தால் மேற்கு நேபாளம் குலுங்கியது; ஏராளமான வீடுகள் சேதமடைந்தன. காவ்முல் கிராம நகராட்சி-2 பகுதியில் புல்வெட்டிக் கொண்டிருந்த 35 வயது பெண், நிலநடுக்கத்தால் உயரத்திலிருந்து உருண்டு வந்த பாறை தாக்கி உயிரிழந்தார்.

இது தவிர, நிலநடுக்கத்தின் விளைவாக ஏற்பட்ட நிலச்சரில் 40 ஆடுகள் இறந்தன என்று அதிகாரிகள் தெரிவித்தனா.

மேற்கு நேபாளத்தில் மிதமானதும், சக்தி வாய்ந்ததுமான நிலநடுக்கங்கள் அவ்வப்போது ஏற்பட்டு வருகின்றன். 2015-ஆம் ஆண்டில் அங்கு ஏற்பட்ட 7.8 ரிக்டா அளவு கொண்ட நிலநடுக்கத்துக்கு 9,000 போ உயிரிழந்தனர்.

## நேட்டோவில் தனியாகவும் இணைய பின்லாந்து தயார்

ஸ்வீடன் மற்றும் ஃபின்லாந்து ஆகிய நாடுகள் நேட்டோவில் இணைய விண்ணப்பித்துள்ள நிலையில், ஸ்வீடன் இல்லாமல் தாங்கள் மட்டும் தனியாக நேட்டோவில் இணையவும் தயார் என்று ஃபின்லாந்து சூசகமாகத் தெரிவித்துள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்ததைத் தொடாந்து, அதுவரை அணிசேரா நிலையைக் கடைபிடித்து வந்த அதன் அண்டை நாடுகளான ஃபின்லாந்தும், ஸ்வீடனும் தங்களது பாதுகாப்புக்காக நேட்டோவில் இணைய விண்ணப்பித்தன.

ஸ்வீடனின் இந்தக் கோரிக்கைக்கு துருக்கி எதிர்ப்புத் தெரிவிக்கிறது. தங்கள் நாட்டின் குர்து இன பிரிவினைவாதிகளுக்கு ஸ்வீடன் ஆதரவளிப்பதால் அந்த நாடு நேட்டோவில் இணைய அனுமதிக்க மாட்டோம் என்று துருக்கி கூறி வருகிறது.

இந்தச் சூழலில் ஃபின்லாந்து வெளியுறவுத் துறை அமைச்சா பெக்கா ஹாவிஸ்டோ செவ்வாய்க்கிழமை கூறுகையில், 'நேட்டோவில் இணைவதற்கான ஸ்வீடனின் விண்ணப்பம் நீண்ட காலத்துக்கு கிடப்பில் போடப்படும் நிலை ஏற்பட்டால், இரு நாடுகளும் ஒன்றாக நேட்டோவில் இணையும் திட்டத்தை மறுபரிசீலனை செய்வோம்" என்றார்.



## கடன் மறுசீரமைப்பு பேச்சுக்கள் 6 மாதங்களில் நிறைவடையும்!

### நந்தலால் வீரசிங்க கூறுகிறார்

அடுத்த 6 மாதங்களில் கடன் மறுசீரமைப்பு பேச்சுகள் நிறைவடையும் என நம்புவதாக மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால்வீரசிங்கதெரிவித்துள்ளார்.

இதேவேளை பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களை மீள செலுத்துவோம் என்றும் அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் கூறியுள்ளார்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு திட்டத்திற்கு இந்தியா ஆதரவளிப்பதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ள நிலையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# மேஜர் அஜித் பிரசன்னவுக்கு நான்கு வருட கடூழிய சிறை!

ஓய்வுபெற்ற மேஜர் அஜித் பிரசன்னவுக்கு நான்கு வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்து உயர் நீதிமன்றம் நேற்று (செவ்வாய்க்கிழமை) தீர்ப்பளித்துள்ளது.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் ஓய்வுபெற்ற மேஜர் அஜித் பிரசன்ன குற்றவாளி என நீதிமன்றம் தீர்ப்பளித்ததை அடுத்து இந்த தண்டனை அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் சந்திப்பின் போது நீதித்துறையை விமர்சித்து கருத்து தெரிவித்தார் என மேஜர் அஜித் பிரசன்ன மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த குற்றச்சாட்டுக்காக அவருக்கு 3 லட்சம் ரூபா அபராதமும் விதித்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.






## அபிவிருத்தி செய்தது யார்? சீரழித்தது யார்? தேர்தலில் மக்கள் சிந்தித்து வாக்களியுங்கள்!

### பெரமுன செயலர் சாகர கோருகிறார்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் மாறுபட்ட சின்னத்தில்; போட்டியிடும். யார் நாட்டுக்கு சேவையாற்றினார்கள்? யார் நாட்டை சீரழித்தார்கள் என்பதை இரு முறை சிந்தித்து மக்கள் வாக்களிக்க வேண்டும். மொட்டு சின்னத்திற்கு வாக்களிப்பதை தவிர மக்களுக்கு மாற்று வழிமுறை ஏதும் கிடையாது என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஜனநாயகம் மற்றும் மக்களின் அரசியல் அபிலாகைளுக்கு மதிப்பளித்து செயற்படுகிறது, உள்ளூராட்சிமன்றத் தேர்தலை பிற்போட அரசாங்கம் சூழ்ச்சி செய்கிறது, அதற்கு பொதுஜன பெரமுன ஆதரவு வழங்குவதாக சமூக வலைத்தளங்களில் போலியான செய்தி வெளியாகின.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தல், வேட்புமனுக்களை சமர்ப்பித்தல் நடவடிக்கைகளில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மும்முரமாக செயற்பட்டது. 254 உள்ளூர் அதிகார சபைகளில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தாமரை மொட்டுச் சின்னத்தில் போட்டியிடும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பொதுஜன பெரமுன மாறுபட்ட பொதுச் சின்னத்தில் போட்டியிடும். ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒன்றிணைந்து கூட்டணியாக ஒருசில உள்ளூர் அதிகார சபைகளில் போட்டியிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேர்தலில் வாக்களிக்கும் போது மக்கள் யார் நாட்டுக்கு சேவையாற்றினார்கள், யார் நாட்டை சீரழித்தார்கள் என்பதை ஒரு முறைக்கு இரு முறை சிந்தித்து வாக்களிக்க வேண்டும். ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன நாட்டுக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபடவில்லை. ஆகவே மக்களுக்கு மாற்று வழியேதும் கிடையாது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ராஜபக்ஷர்களுக் எதிராக சமூக வலைத்தளங்களில் திட்டமிட்ட வகையில் சேறுபூசல்கள் முன்னெடுக்கப்படுகின்றன, இருப்பினும் நாட்டு மக்கள் மத்தியில் பொதுஜன பெரமுனவிற்கு நல்ல நிலைப்பாடு காணப்படுகிறது, இடம்பெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அமோக வெற்றிப்பெறும். – என்றார்.

## 45 ஆயிரம் ரூபாவுக்கும் மேல் வருமானம் ஈட்டுபவர்களிடமும் வரி விதிக்க பரிந்துரை!

### சர்வதேச நாணய நிதியம் விடுத்தது என்கிறார் பந்துல

கடினமாக இருந்தாலும் மக்கள் வரிச்சுமையை சுமக்க வேண்டும் என அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

மாத வருமானமாக 45 ஆயிரம் ரூபாவுக்கு மேல் ஈட்டுகின்ற அனைவரிடமும் வரி அறவிடுமாறு சர்வதேச நாணய நிதியம் தெரிவித்திருந்த போதிலும், நீண்ட கலந்துரையாடலின் பின்னர் அதனை ஒரு லட்சம் ரூபாவாக அதிகரிக்க முடிந்தது.

இதற்கு உறுப்பினர்கள், அமைச்சர்கள், மக்கள் பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் என அனைவரும் பணம் கொடுக்க வேண்டும். ஒவ்வொருவரும் கொடுப்பனவாக பெறும் எரிபொருள், வீட்டு வாடகை போன்றவற்றுக்கு நிறைய வரி செலுத்த வேண்டியுள்ளது.

எல்லோரும் அதை உணர்கிறார்கள். மாதாந்தம் 45 ஆயிரம் ரூபாவுக்கு மேல் வருமானம் ஈட்டுபவர்கள் அனைவரிடமிருந்தும் வரி அறவிடப்பட வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் பேச்சின் போது இலங்கைக்கு தெரிவித்துள்ளதாக ஜனாதிபதி அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார்.

நீண்ட விவாதங்களுக்குப் பிறகு, இதை எப்படியும் செய்ய முடியாது என்று கண்டறியப்பட்டது. இதன் மூலம் ஒரு லட்சம் ரூபா வரையான சம்பளத்துக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டது. இந்த வரிகளை குறைத்து வரிகளை மாற்றினால் இந்த தொகையை சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து பெற முடியாமல் போகும்.

பின்னர் இந்த ஒப்பந்தம் முற்றாக இல்லாமல் போய்விடும். அப்படி கடன் பணம் இல்லாமல் நாட்டை நடத்தி செல்ல முடியும் என யாராவது கூறினால் அதனை ஏற்கத் தயாராக இருக்கின்றோம். ஏனென்றால், நாட்டுக்குத் தேவையான கனிம எண்ணெய், உரங்கள், இரசாயனங்கள், மருந்துகள், இயந்திரங்கள் மூலப்பொருள்களை நாம் இறக்குமதி செய்ய வேண்டும்.

எனவே இவற்றை வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்ய விரும்பினால், இறக்குமதி செய்யும் திறன் உங்களிடம் இருக்க வேண்டும். அதற்கு போதுமான அளவு இருப்பு இருக்க வேண்டும். அதற்கு உலகம் ஏற்றுக்கொண்ட சூத்திரம் உள்ளதென அவர் மேலும் தெரிவித்துள்ளார்

## கொழும்பில் நடந்த தென்னிந்திய சினிமா பிரபலத்தின் உறவினர் திருமணத்தில் மஹிந்த உள்ளிட்ட பிரமுகர்கள்







கொழும்பில் பிரபல தொழிலதிபர் ராஜு ராதா மற்றும் ஆரோன் தவராஜா ஆகியோரின் மகள் அஷ்வினி ராதாவின் திருமண விழாவில் மஹிந்த உட்பட அரசியல் பிரமுகர்கள் பங்கேற்றுள்ளனர்.

கொழும்பில் உள்ள ஹில்டன் ஹோட்டலில் திருமண வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில் பல அரசியல் பிரமுகர்கள் ஒன்றுகூடியுள்ளனர்.

மேற்படி நிகழ்வில், மஹிந்த ராஜபக்ஷ, பௌசி, ஹரின் பெர்னாண்டோ போன்ற பலர் கலந்துகொண்டுள்ளனர். பிரபல தொழிலதிபர் ராஜு ராதா தென்னிந்திய நடிகை ராதிகா சரத்குமாரின் சகோதரர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலால் நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்படாது!

## அமைச்சர் ஜீவன் இப்படிக் கூறுகிறார்



உள்ளூராட்சி சபைத்தேர்தலால் நாட்டில் ஆட்சிமாற்றம் ஏற்படப்போவதில்லை. எனவே, தற்போதைய பொருளாதார நெருக்கடியில் நிதியை மக்கள் நலன்களுக்காகவே பயன்படுத்த வேண்டும் என்று இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், அமைச்சருமானஜீவன்தொண்டமான் தெரிவித்தார். உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ள அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்களின் பொதுச் செயலாளர்களுக்கும், தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடலொன்று தேர்தல் ஆணைக்குழுவில் நேற்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்றது. இந்த சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

பல மில்லியன் ரூபாக்களை செலவழித்து உள்ளூராட்சிசபைத் தேர்தலை நடத்துவதால் ஆட்சி மாறப்போவதில்லை. பொருளாதார நெருக்கடியும் தீரப்போவதில்லை. இது தொடர்பில் எனது நிலைப்பாட்டை ஏற்கனவே அறிவித்துள்ளேன்.

தற்போதைய சூழ்நிலையில் நாட்டு மக்களுக்கு தேர்தல் தொடர்பான எண்ணம் இல்லை. அடுத்தவேளை உணவு பற்றிய ஐயப்பாடு பலருக்கும் உள்ளது. பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவது தொடர்பில் பிரச்சினை உள்ளது. எனவே, மக்களின் நலன்களுக்கே தற்போது முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும்.

நான் தேர்தலுக்கு எதிரானவன் அல்லன். ஆனாலும் தேர்தலை நீதியாகவும், நியாயமாகவும் நடத்துவதற்கு ஏதுவான சூழ்நிலை இருக்க வேண்டும்.– என்றார்.



## 2 லட்சம் இலங்கையருக்கு சவூதியில் வேலைவாய்ப்பு!

### அமைச்சர் மனுஷ தகவல்

சவூதி அரேபியா 2023 ஆம் ஆண்டில் 2 லட்சம் இலங்கைப் பணியாளர்களை தமது நாட்டுக்கு வரவழைக்கத் தயாராக இருப்பதாக இலங்கை தொழிலாளர் மற்றும் வெளிநாட்டுவேலைவாய்ப்பு அமைச்சர் மனு நாணயக்கார தெரிவித்துள்ளார்.

சவூதி அரேபியா 2022 இல் இலங்கைக்கு 54 ஆயிரம் வேலை வாய்ப்புகளை வழங்கியதாக அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

அதேநேரம் 2022 இல் 3 லட்சம் பேருக்கும் மேற்பட்ட இலங்கையர்கள் வெளிநாட்டு வேலைகளுக்குச் சென்றனர் எனவும், அதில் பெரும்பாலானவர்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்றனர் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

வெளிநாட்டுத் பணியாளர்களின் பணம் இலங்கைக்கான வெளிநாட்டு வருமானத்தின் முக்கிய ஆதாரங்களில் ஒன்றாகும்.

இந்த நிலையில் 2022 இல், இலங்கை புலம்பெயர் பணியாளர்கள் சுமார் 38 லட்சம் டொலர்களை நாட்டுக்கு அனுப்பியுள்ளதாக மத்திய வங்கி தரவு காட்டுகின்றன.

# உள்ளூராட்சி மன்ற தேர்தலை பிற்போட இடமளிக்க முடியாது!

## நாலக கொடஹேவா திட்டவட்டம்



உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போட ஒருபோதும் இடமளிக்க முடியாது. மார்ச் மாதம் 09 ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படும்.

மக்கள் அரசியலைப் புறக்கணித்தால் ஊழல்,மோசடியாளர்கள் தான் தொடர்பில் ஆட்சியில் இருப்பார்கள். நாட்டு மக்கள் தேர்தலுக்குத் தயாராக வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் நாலக கொடஹேவா தெரிவித்தார்.

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கும், அரசியல் கட்சி கட்சிகளின் செயலாளர்கள், பிரதிநிதிகள் மற்றும் சுயாதீன குழுக்களின் பிரதிநிதிகளுக்கு இடையிலான சந்திப்பு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் இடம்பெற்றது. இந்த பேச்சின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

தேர்தல் செலவீனம் தொடர்பில் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் இடம்பெற்ற பேச்சு சாதகமாக உள்ளது. தேர்தலை எதாவது ஒரு வழிமுறையில் பிற்போட அரசாங்கம் சூழ்ச்சி செய்து வருகின்றன நிலையில் தேர்தலை நடத்தத் தேர்தல்கள் ஆணைக்குழு சிறந்த தீர்மானங்களை எடுத்துள்ளமை மகிழ்ச்சிக்குரியது,

தேர்தலை பிற்போடும் அரசாங்கத்தின் முயற்சிக்கு எதிர்க்கட்சிகளும், தேர்தல்கள் ஆணைக்குழுவும் தடையாக உள்ளமை அரசாங்கத்துக்குப் பாரிய எதிர்ப்பாக உள்ளது. ஆகவே, தேர்தலை பிற்போட எந்தக் காரணிகளுக்காகவும் இடமளிக்க முடியாது.

தேர்தலைப் பிற்போட்டு, பலவந்தமான முறையில் அதிகாரத்தில் இருக்கும் பழக்கம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு உண்டு. முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தனவின் கொள்கைகளையே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பின்பற்றுகிறார்.

பலவீனமான அரச தலைவரின் குறுகிய நோக்கத்துக்காக மக்களின் ஜனநாயக உரிமையை விட்டுக் கொடுக்க முடியாது.

நாட்டு மக்கள் அரசியலைப் புறக்கணித்தால் ஊழல் மோசடியார்கள் தொடர்ந்து ஆட்சி செய்வார்கள். நாட்டு மக்களின் கருத்துகளுக்கு மதிப்பளிக்காமல் அரசாங்கம் தான்தோன்றித்தனமாக செயற்படுகிறது. இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்கள் அரசாங்கத்தைப் புறக்கணிக்க வேண்டும்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் பெறுபேறுகள் அடுத்தக்கட்ட அரசியல் தீர்மானத்துக்கு வழி வகுக்கும். தேர்தலை பிற்போட்டால் ஏற்படும் விளைவுகள் பாரதூரமானவையாக இருக்கும் என்பதை அரசாங்கம் அரகயல சம்பங்கள் ஊடாக மீட்டிப்பார்க்க வேண்டும். – என்றார்.



## திமிங்கலத்தில் இருந்து எடுத்த பெறுமதியான பொருளுடன் ஒருவர் முல்லைத்தீவில் கைது!

முல்லைத்தீவில் திமிங்கலத்தில் இருந்து எடுக்கப்படும் பெறுமதியான பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய் பிரதேசத்தின் முகத்துவாரம் பகுதியில் உள்ள வீடொன்றில் அம்பர் இருப்பதாக தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்த தகவலுக்கமைய முல்லைத்தீவு விசேட அதிரடிப்படையின் உதவியுடன் முல்லைத்தீவு வனஜீவராசிகள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் பிரானந்து(வயது 47 ) என்பவருடைய வீட்டில் இருந்து 1.85 கிலோ கிராம் நிறையுடைய அம்பர் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகத்தின் அடிப்படையில் குறித்த வீட்டின் உரிமையாளர் முல்லைத்தீவு வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டு முல்லைத்தீவு நீதிமன்றத்தில் முன்னிலையில்படுத்தபட்டார்.

சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து ஒரு லட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

மேலும் அம்பரை மேலதிக பகுப்பாய்வுக்காக என்.ஏ.ஆர்.ஏ. நிறுவனத்திற்கு அனுப்புவதற்கு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அம்பர் ஆனது திமிங்கிலத்தின் குடல் பகுதியில் உற்பத்தியாகும் ஒரு பதார்த்தம் எனவும் இதனை உடைமையில் வைத்திருந்தமை சட்டவிரோதமானது எனவும் முல்லைத்தீவு வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெருவித்துள்ளனர்.

## ஒருகுடம் நீருக்காக 200 படிகள் ஏறி இறங்கும் அவலத்தில் மக்கள்!

### பிரச்சினையை தீர்க்க ஜீவனிடம் கோரிக்கை



ஒரு குடம் நீரை நிரப்பிக்கொள்வதற்கு அவர்கள் படும்பாடு 'வலி சுமந்த கதையாகும். அந்தவகையில் அக்கரப்பத்தனை பன்சல கொலனி மக்கள் ஒரு குடம் நீருக்காக 200 படிகள் ஏறி இறங்கவேண்டியுள்ளது. சிலவேளைகளில் நீர் இல்லாமல் வெறுங்கையுடன் திரும்ப வேண்டிய அவலமும் ஏற்படுகின்றது.

மேற்படி கொலனியில் 46 குடும்பங்களைச் சேர்ந்த 260 இற்கு அதிகமான மக்கள் தினந்தோறும் குடிநீர் பிரச்சனையை எதிர் கொண்டு வருவதுடன், அக்கரப்பத்தனை பிரதேச சபை ஊடாக வாரக்குக்கு ஒரு நிரப்பி வழங்கப்படுகின்றது என மக்கள் குறிப்பிடுகின்றனர். 'நீர் வளம் மிக்க மலையகத்தில் எமக்கு நீர் குடிநீர் கிடைக்காதமை வேதனையளிக்கின்றது. நீரை பெறுவதிலேயே பாதி நாள் போய்விடுகின்றது. எப்படிதான் நாம் வாழ்வது.' என மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அத்துடன், நீர்வழங்கல் அமைச்சை பொறுப்பேற்றுள்ள ஜீவன் தொண்டமான், எமது குறையை தீர்ப்பார் என நம்புகின்றோம்.

எமக்கான குடிநீர் திட்டத்தை வழங்குமாறு உரிமையுடன் ஜீவனிடம் கேட்டுக்கொள்கின்றோம் எனவும்

# ஒரு குழந்தைக்கு மேல் பெற்றால் இந்தியப் பெண்களுக்குச் சலுகை




ஒரு குழந்தைக்கு மேல் பெற்றுக் கொள்ளும் அரசு பெண் ஊழியர்களுக்கு பல்வேறு சலுகைகள் வழங்கப்படும் என்று இந்தியாவின் சிக்கிம் மாநில அரசு அறிவித்துள்ளது.

இந்தியாவின் மக்கள் எண்ணிக்கை 140 கோடியை தாண்டிச்சென்றுள்ள நிலையில். உலக அளவில் மக்கள் தொகையில் 2ஆவது இடத்தில் இந்தியா உள்ளது. இருந்தபோதும், அந்த நாட்டன் வடக்கு கிழக்கு மாநிலங்களில் ஒன்றான சிக்கிமில் மக்கள் எண்ணிக்கைகுறைவாகவேஉள்ளது. அங்கு பிறப்பு விகிதம் குறைவாக உள்ளதாக அந்த மாநில அரசு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், சிக்கிமை சேர்ந்த பெண் அரசு ஊழியர்கள் ஒரு குழந்தைக்கும் அதிகமாகப் பெற்றுக்கொண்டால் அரசின் சார்பில் பல்வேறு சலுகைகள் வழங்கப்படும் என்று அந்த மாநில அரசு அறிவித்துள்ளது.

சிக்கிம் மாநிலத்தின் மொத்த மக்கள் எண்ணிக்கை 6 லட்சத்து 10 ஆயிரத்து 577 ஆகும். இங்கு குழந்தை பிறப்பு விகிதம் 1.1 சதவீதமாக உள்ளது. எனவே, குழந்தை பிறப்பு விகிதத்தை அதிகரிக்கும் நோக்கத்தில் சிறப்பு சம்பளம் உள்ளிட்ட பல சலுகைகளை சிக்கிம் முதல்வர் பிரேம் சிங் தமங் அறிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் கூறியபோது, "பெண் அரசு ஊழியர்கள் 2ஆவது குழந்தை பெற்றுக்கொண்டால்சிறப்புசம்பளஉயர்வு வழங்கப்படும். 3ஆவது குழந்தை பெற்றுக்கொண்டால் இரண்டு ஊதிய உயர்வு அளிக்கப்படும். சிக்கிம் மக்கள், ஒன்றுக்கும் மேற்பட்ட குழந்தைகளைப் பெற்றுக்கொண்டால் பல நிதி உதவிகள் அளிக்கப்படும். குழந்தை பிறக்காத பெண்களுக்கு செயற்கை கருத்தரித்தல் (ஐவிஎஃப்) முறையில் சிகிச்சை அளிக்கும் வசதியை முன்னெடுக்கவும் அரசு முடிவு செய்துள்ளது.

ஐவிஎஃப் முறையில் குழந்தை பெறும் பெண்களுக்குரூ.3லட்சம்நிதிஉதவிஅளிக்கப்படும். பேறுகால விடுப்பாக பெண் அரசு ஊழியர்கள் 365 நாட்கள் எடுத்துக்கொள்ளலாம். புதிதாக தந்தையாகும் ஆண்களுக்கு 30 நாள் விடுப்பு அளிக்கப்படும். குழந்தை பிறப்பு விகிதத்தை அதிகரிக்கவே இந்தச் சலுகைகளை அறிவித்துள்ளோம்" என்றார்.

# பெண்களுக்கான கல்வித் தடையை ஆப்கான் நீக்கவேண்டும்: ஐ.நா.



ஆப்கானிஸ்தானில் பெண்கள் கல்வி கற்க விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்க வேண்டும் என்று அந்நாட்டின் ஆட்சியாளர்களான தலிபான்களை ஐநா வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து ஐநா பொதுச்செயலாளர் அந்தோனியோ குத்தேரஸ் தெரிவித்ததாவது: கல்வி பயில்வதைத் தடுக்கும் அனைத்து பாரபட்சமான சட்டங்களையும், நடைமுறைகளையும் முடிவுக்குக் கொண்டுவருவதற்கான நேரம் இது. குறிப்பாக ஆப்கனிஸ்தானில் இடைநிலை மற்றும் உயர்நிலை பள்ளிகளில் பெண்கள் கல்வி பயில்வதற்கு விதிக்கப்பட்டுள்ள மூர்க்கத்தனமான தடையை திரும்பப் பெறுமாறு கேட்டுக் கொள்கிறேன். இந்த ஆண்டுக்கான சர்வதேச கல்வி தினத்தின் கருப் பொருள், 'கல்விக்கு முன்னுரிமை கொடுங்கள்' என்பதே என்றார்.

ஆப்கானிஸ்தானில் சுமார் 80% சிறுமிகளுக்கு கல்வி மறுக்கப்பட்டுள்ளதாக யுனெஸ்கோ தெரிவித்துள்ளது. அந்த நாட்டில் இருந்து அமெரிக்க மற்றும் நேட்டோ படைகள் கடந்த 2021ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் வெளியேறின. அதன் பின்னர் தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றினர். இஸ்லாமியர்களின் ரியத் சட்டத்தின்படியே ஆட்சி என்று அவர்கள் அறிவித்தனர். எனினும், கடந்த முறையைப் போல் ஆட்சி இருக்காது என்றும், பெண் கல்வி, பெண் சுதந்திரம் பேணப்படும் என்றும், உலக நாடுகளுடன் நட்புறவு ஏற்படுத்தப்படும் என்றும் அவர்கள் உறுதியளித்தனர். ஆனால், பெண்களின் உரிமையை தொடர்ந்து பறிக்கும் செயல்களில் தலிபான்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

# எகிப்து அதிபர் இந்தியா வருகை

இந்த குடியரசு தின விழாவின் சிறப்பு விருந்தினரான கலந்துகொள்ள எகிப்து அதிபர் அல் சிசி அழைக்கப்பட்டுள்ளார். அவர் தனி விமானம் மூலம் நேற்று டெல்லி வந்தடைந்தார்.

நாட்டின் 74ஆவது குடியரசு தினம் நாளை நடைபெற உள்ளது. இதை முன்னிட்டு டெல்லியில் நடைபெற உள்ள விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்வதற்காக எகிப்து அதிபர் அல் சிசி செவ்வாய்கிழமை மாலை டெல்லியை வந்தடைந்தார்.

விமான நிலையத்தில் நாட்டுப்புற நடனக் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. அவருடன் எகிப்து அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் அடங்கிய குழுவும் டெல்லி வந்துள்ளது.

4 நாள் பயணமாக டெல்லி வந்துள்ள அல் சிசி, இந்தியக் குடியரசுத் தலைவரை இன்று சந்தித்தார். குடியரசுத்தலைவர் மாளிகையில் அவருக்கு ராணுவ அணிவகுப்பு மரியாதை அளிக்கப் பட்டது. இதையடுத்து, குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி, வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் உள்ளிட்டோரை குடியரசுத் தலைவர் மாளிகையில் சந்தித்து அல் சிசி

# நேபாளப் பிரதமர் முன்பாக தீக்குளித்தவர் உயிரிழப்பு

நேபாள நாடாளுமன்றத்தில் இருந்து பிரதமர் பிரசண்டா வெளியேறியபோது நேற்று தீக்குளித்த நபர் சிகிச்சைப் பயனின்றி உயிரிழந்தார்.

நேபாளம் நாட்டின் புதிய பிரதமராக கடந்த டிசெம்பர் மாதம் சிபிஎன் -மாவோயிஸ்ட் கட்சியைச் சேர்ந்த புஷ்ப கமல் தாஹால் என்ற பிரசண்டா தேர்வு செய்யப்பட்டார்.

பிரதமர் நேபாள நாடாளுமன்றத்திலிருந்து நேற்று பிற்பகலில் வெளியேறியபோது அடையாளம் தெரியாத நபர் ஒருவர் ஓடி வந்து டீசலை ஊற்றித் தீக்குளித்தார்.

உடனடியாக அந்தப் பகுதியிலிருந்து பிரதமர் பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்பட்ட நிலையில், தீக்குளித்து நபரை மீட்டு பாதுகாப்புப் படையினர் மருத்துவமனையில் சேர்ப்பித்தனர்.

தற்கொலைக்கு முயன்ற நபருக்கு தீவிர சிகிச்சை வழங்கப்பட்டபோதும் அது பயனின்றி அவர் உயிரிழந்தார் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

காவல்துறையின் விசாரணையில் தீக்குளித்த நபர், இல்லம் மாவட்டத்தை சேர்ந்த பிரேம்பிரசாத் ஆச்சார்யா(வயது 37) எனத் தெரிய வந்துள்ளது.

மேலும், பிரதமர் வெளியேறும் நேரத்தில் அவர் தீக்குளித்ததற்கான காரணம் இதுவரை தெரியவில்லை. தொடர்ந்து காவல்துறையினர் விசாரணை செய்து வருகின்றனர்.


# ஆப்கானில் கடும் குளிர் 124 பேர் இதுவரை சாவு

ஆப்கானிஸ்தானில் கடந்த 2 வாரங்களாக நிலவி வரும் மிகக் கடுமையான குளிருக்கு இதுவரை 124 பேர உயிரிழந்துள்ளனர் என்று அந்த நாட்டு பேரிடா மேலாண்மைத் துறை அமைச்சகம் தெரிவித்தது.

தன்னார்வ தொண்டு அமைப்புகளில் பெண்கள் பணியாற்றுவதற்கு தலிபான்கள் தடை விதித்துள்ளனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, பேரிடா காலங்களில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளக்கூடிய பல தொண்டு அமைப்புகள் தங்களது நடவடிக்கைகளை நிறுத்திவைத்துள்ளன.

இதுவும் கடும் குளிரால் உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிகரித்துவருவதற்குக்காரணமாகக் கூறப்படுகிறது. இருந்தாலும், தொண்டு நிறுவனங்களில் பெண்கள் பணியாற்ற விதிக்கப்பட்டுள்ள தடை தொடரும் என்று தலிபான்கள் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர்.

# பயணிகள் வாகனம் தீப்பிடித்து தாய்லாந்தில் 11 பேர் உயிரிழப்பு



தாய்லாந்தில் பயணிகளுடன் சென்றுகொண்டிருந்த வாகனம் சாலையோரத் தடுப்பில் மோதி தீப்பற்றியதில் 2 சிறுவர்கள் உள்பட 11 பேர் உயிரிழந்தனர். திங்கட்கிழமை சம்பவம் இடம்பெற்றது.

வடகிழக்கு மாகாணமான அமாட் சாரோவனிலிருந்து தலைநகா பாங்காக்கை நோக்கி 12 பேருடன் சென்றுகொண்டிருந்த வாகனம், நகோன் ரட்சசிமா மாகாணத்தில் கட்டுப்பாட்டை இழந்து சாலையோரத் தடுப்பில் மோதி கவிழ்ந்தது.

இதில், அந்த வாகனத்திலிருந்த எரிபொருள் தீப்பிடித்து வாகனம் முழுவதும் நெருப்பு வேகமாகப் பரவியது. தீ சூழ்ந்துகொள்வதற்கு முன்னதாக, அந்த வாகனத்திலிருந்த 20 வயது மாணவன் மட்டும் அதிலிருந்து வெளியேறித் தப்பினார். மற்ற 11 பேரும் வாகனத்துக்குள் சிக்கிக் கொண்டதால் அவர்கள் அனைவரும் அங்கிருந்து வெளியேற முடியாமல் தீயில் கருகி உயிரிழந்தனர். அவர்களில் 2 பேர் சிறுவர்கள்



# ஆஸ்திரேலிய டென்னிஸ்: மகளிர் அரையிறுதியில் அசரென்கா, ரெபைக்கினா

ஆஸி. ஓபன் மகளிர் ஒற்றையா பிரிவில் முன்னாள் சாம்பியன் விக்டோரியா அசரென்கா, ரெபைக்கினா, காரன் கச்சனோவ், சிட்ஸிபாஸ் ஆகியோா அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளனா.

மெல்போர்னில் நடைபெற்ற மகளிா ஒற்றையா காலிறுதியில் 2 முறை சாம்பியன் பட்டம் வென்ற பெலாரஸின் அசரென்கா 6-4. 6-1 என்ற நோ செட்களில் ஜெஸிக்கா பெகுலாவை வீழ்த்தினார். 2012, 2013இல் சாம்பியன் பட்டம் வென்றிருந்த அசரென்கா 10 ஆண்டுகள் கழித்து மீண்டும் அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளார்.

நடப்பு விம்பிள்டன் சாம்பியன் ரெபைக்கினா 6-2, 6-4 என்ற நோ செட்களில் ஜெலனா ஒஸ்டபென்கோவை வீழ்த்தினார். அரையிறுதியில் அசரென்கா-ரெபைக்கினா மோதுகின்றனா.

முதல் அரையிறுதியில் கச்சனோவ்:

ஆடவா ஒற்றையா பிரிவில் ரஷிய வீரா காரன் கச்சனோவ்- அமெரிக்காவின் செபாஸ்டியன் கோர்டா மோதினா. இதில் கச்சனோவ் 7-6, 6-3, 3-0 என முன்னிலையில் இருந்தபோது, மணிக்கட்டில் காயம் ஏற்பட்டதால் விலகுவதாக அறிவித்தா செபாஸ்டியன். ஆஸி. ஓபனில் முதன் முதலாக அரையிறுதிக்கு தகுதி பெற்றாா கச்சனோவ்.

மற்றொரு காலிறுதியில் கிரீஸ் வீரா ஸ்டெஃப்னோஸ் சிட்ஸிபாஸ் 6-3, 7-6, 6-4 என்ற நோ செட்களில் செக். குடியரசின் ஜிரி லெஹக்காவை வீழ்த்தினார். அரையிறுதியில் கச்சனோவ்-சிட்ஸிபாஸ் மோதுகின்றனா.

# உலகக் கோப்பை ஹாக்கி போட்டி அரையிறுதியில் ஆஸி., பெல்ஜியம்



எஃப்ஐஎச் உலகக் கோப்பை ஆடவா ஹாக்கிப் போட்டியின் அரையிறுதிக்கு 12ஆவது முறையாக ஆஸ்திரேலியாவும், நடப்பு சாம்பியன் பெல்ஜியமும் தகுதி பெற்றுள்ளன.

உலகக் கோப்பை காலிறுதி ஆட்டங்கள் இந்தியாவின் புவனேசுவரத்தில் செவ்வாய்க் கிழமை நடைபெற்றன. முதல் ஆட்டத்தில் மூன்று முறை சாம்பியன் ஆஸ்திரேலியாவும் -ஸ்பெயினும் மோதின. தொடக்கம் முதலே ஆஸி. அணி ஆதிக்கம் செலுத்தியது. எனினும் 20ஆவது நிமித்தில் ஸ்பெயின் வீரா சேவியா ஜிஸ்பாட், 24ஆவது நிமித்தில் மார்க் ரெக்ஸென்ஸ் ஆகியோா பீல்ட் கோலடித்து அதிர்ச்சி அளித்தனா. இதனால் ஸ்பெயின் 2-0 என முன்னிலை பெற்றது.

பின்னா சுதாகரித்து ஆடிய ஆஸி. அணி தரப்பில் 33, 37ஆவது நிமிடங்களில் பெனால்டி கார்னா வாய்ப்பை பயன்படுத்தி கோலடித்தா ஹேவாட். 30ஆவது நிமித்தில் ஃபிளின் ஒக்லிவும், 32ஆவது நிமித்தில் கேப்டன் ஸ்லேவ்ஸ்கியும் அற்புதமாக பீல்ட் கோலடித்தனா. முதல் பாதியில் ஆஸி. 4 கோல்களைப் பதிவு செய்தது. ஸ்பெயின் தரப்பில் 41ஆவது நிமித்தில் மார்க் மிரால்ஸ் மூன்றாவது கோலடித்தார். முதல் குவாட்டரில் ஸ்பெயின் அணி ஈடுகொடுத்து ஆடிய நிலையில் 3 பெனால்டி கார்னா வாய்ப்புகள் கிடைத்தன. ஆனால் அதை கோலாக்க முடியவில்லை. ஆட்டத்தின் கடைசி கட்டத்தில் கிடைத்த அருமையான பெனால்டி ஸ்ட்ரோக் வாய்ப்பை கேப்டன் மிரால்ஸ் வீணடித்தார். அவா கோலடித்திருந்தால், பெனால்டி ஷூட் அவுட் முறை கடைபிடிக்கப்பட்டிருக்கும். ஸ்பெயின் அருமையான வாய்ப்பை இழந்தது.

பெல்ஜியம் அதிரடி:

நியூஸிலாந்துக்கு எதிரான காலிறுதி ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் பெல்ஜியம் தொடக்கம் முதலே அசத்தலாக ஆடியது. பெல்ஜியத்தின் வேகமான ஆட்டத்துக்கு நியூஸி. வீராகளால் ஈடுதர முடியவில்லை. 11ஆவது நிமிடத்தில் பெனால்டி கார்னா வாய்ப்பை பயன்படுத்தி கோலடித்தா பெல்ஜியத்தின் டாம் பூன்.

17ஆவது நிமித்தில் பெல்ஜிய வீரா கௌன்காட் கடத்தி அனுப்பிய பந்தை சிறப்பாக கையாண்டு கோலடித்தா வேன் ஆபேல். இதன் மூலம் 2-0 என பெல்ஜியம் முன்னிலை பெற்றது. தென்கொரியா-நெதாலாந்து காலிறுதியில் வெல்லும் அணியுடன் அரையிறுதியில் மோதுகிறது பெல்ஜியம்.

# பொண்டிங்கின் சாதனையை சமன் செய்தார் ரோஹித் சர்மா

சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் அதிக சதங்கள் விளாசியவர்களின் பட்டியலில் 3ஆவது இடத்தில் இருந்த ரிக்கி பாண்டிங்கின் 30 சதங்கள் சாதனையை சமன் செய்துள்ளார் இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா.

இந்தியா நியூஸிலாந்து அணிகள் இடையிலான 3ஆவது மற்றும் கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டி இந்தூரில் நேற்று நடைபெற்றது. இதில் இந்திய அணியின் தலைவரும் தொடக்க வீரருமான ரோஹித் சர்மா 83 பந்துகளில், 6 சிக்ஸர்கள், 9 பவுண்டரிகளுடன் சதம் விளாசினார். கடைசியாக அவர், கடந்த 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற போட்டியில் சதம் விளாசியிருந்தார்.

சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் ரோஹித் சர்மாவின் 30ஆவது சதமாகவும் இது அமைந்தது. இதன் மூலம் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் அதிக சதங்கள் விளாசியவர்களின் பட்டியலில் 30 சதங்களுடன் உள்ள ஆஸ்திரேலியாவின் ரிக்கி பாண்டிங்கின் சாதனையை சமன் செய்துள்ளார் 35 வயதான ரோஹித் சர்மா.

இந்த மைல் கல்லை ரோஹித் சர்மா 241ஆவது ஆட்டத்தில் எட்டியுள்ளார். ரிக்கி பாண்டிங் 30 சதங்களை 375 ஆட்டங்களில் அடித்திருந்தார். இந்த வகை சாதனையில் சச்சின் டெண்டுல்கர் (49 சதங்கள்), விராட் கோலி (46) ஆகியோர் முதல் இரு இடங்களில் உள்ளனர்.

இந்தூர் போட்டியில் நியூஸிலாந்துக்கு எதிராக ரோஹித் சர்மா 83 பந்துகளில் சதம் விளாசினார். இது அவர், அடித்த 2வது விரைவு சதமாகும். இதற்கு முன்னர் 2018ம் நாட்டிங்காமில் இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் 82 பந்துகளில் சதம் விளாசியிருந்தார்.




# ஐ.சி.சி. டெஸ்ட் கனவு அணியில் இலங்கையருக்கு இடமில்லை

2022ஆம் ஆண்டில் சிறப்பாக விளையாடிய வீரர்களைக் கொண்ட ஐசிசி டெஸ்ட் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. பென் ஸ்டோக்ஸ் தலைமையிலான அணியில் இலங்கையர் எவருக்கும் இடமளிக்கப்படவில்லை. இந்த அணியில் கவாஜா, லபுஷேன், கம்மின்ஸ், நாதன் லயன் என நான்கு ஆஸ்திரேலிய வீரர்களும் பேர்ஸ்டோ, பென் ஸ்டோக்ஸ், ஜேம்ஸ் ஆண்டர்சன் என மூன்று இங்கிலாந்து வீரர்களும் இடம்பெற்றுள்ளார்கள். 2022ஆம் ஆண்டுக்கான ஐசிசி டெஸ்ட் அணி: 1. உஸ்மான் கவாஜா (ஆஸ்திரேலியா) 2. கிரைக் பிராத்வெயிட் (மே.இ. தீவுகள்) 3. லபுஷேன் (ஆஸ்திரேலியா) 4. பாபர் ஆஸம் (பாகிஸ்தான்) 5. ஜானி பேர்ஸ்டோ (இங்கிலாந்து) 6. பென் ஸ்டோக்ஸ் (இங்கிலாந்து) 7. ரிப் பந்த் (இந்தியா) 8. பேட் கம்மின்ஸ் (ஆஸ்திரேலியா) 9. ரபாடா (தெ.ஆ.) 10. நாதன் லயன் (ஆஸ்திரேலியா) 11. ஜேம்ஸ் ஆண்டர்சன் (இங்கிலாந்து)



# இந்திய தூதரக அதிகாரியை சந்தித்தார் சாள்ஸ் எம்.பி.!

மன்னாருக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய தூதரகத்தின் 2 ஆம் நிலை அதிகாரி நாகராஜன் ராமசாமி, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனை சந்தித்து கலந்துரையாடி உள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினரின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இந்தச் சந்திப்பின் போது தற்போதைய அரசியல் நிலைவரங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

## கோட்டாபயவை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புரிந்துகொண்டுள்ளனர் என்றும், எதிர்காலத்தில் இவ்வாறானவர்களுக்கு மக்கள் சரியான பாடம் புகட்டுவார்கள் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் நம்பிக்கை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தனக்கு எதிராகச் சூழ்ச்சி செய்யப்படுவதை கோட்டாபய ஒப்புக்கொள்ள மறுத்து விட்டார். அதுவே அவர் வீடு செல்லச் காரணமானது.

கோட்டாபய ராஜபக்ச பதவி வகித்த காலத்தில் எரிபொருளுக்குக் கடுமையான தட்டுப்பாடு நிலவியது. எனினும், அந்தக் காலத்தில் இறக்குமதி செய்யப்பட்ட அதே அளவு எரிபொருள் தற்போது இறக்குமதி செய்யப்படுகின்றது. தற்போது வரிசைகளைக் காணவில்லை - என்றார்.

# கரு ஜயசூரியவுக்கு உயர் தேசிய விருது!

சுதந்திர தினத்தை முன்னிட்டு முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு இலங்கையின் உயரிய தேசிய விருதான ஸ்ரீலங்காபிமன்ய விருது வழங்கப்படவுள்ளது.

இந்த மதிப்புமிக்க விருதைப் பெறும் எட்டாவது நபர் என்ற பெருமையை 82 வயதான முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய பெற்றுள்ளார்.

1986 இல் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ முதன் முதலிலும் 2017 ஆம் ஆண்டு டபிள்யூ.டி.அமரதேவ இறுதியாகவும் இந்த விருதைப் பெற்றிருந்தனர்.

பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ள விழாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தப் விருதை கரு ஜயசூரியவிற்கு வழங்கவுள்ளார்.

2018 ஆம் ஆண்டு அரசமைப்பு நெருக்கடி சந்தர்ப்பத்தில் முக்கிய பங்கு வகித்தமைக்காக இந்த விருது வழங்கப்படவுள்ளது.

முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிடாமல் பொதுப் பதவியிலிருந்து விலகி சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தை ஸ்தாபித்தமை குறிப்பிடத்தக்கது.

# காணாமலாக்கப்பட்டோர் அலுவலகம் கொள்ளுப்பிட்டியிலிருந்து இடமாற்றம்!

கொழும்பு 3இல் இருந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அலுவலகம் மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி எண்.40, 3 ஆவது மாடி, புத்கமுவ வீதி, ராஜகிரிய என்ற முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளதாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அலுவலகம் அறிவித்துள்ளது.

## ரூ.நான்கரை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களது பொதிகள் உடைமைகள் சோதனையிடப்பட்டன. எனினும் எந்தவொரு சட்டவிரோதமான பொருட்களும் கிடைக்கவில்லை.

இருப்பினும் இரகசியத் தகவலின் அடிப்படையிலேயே அதிகாரிகள் அவர்களிடம் விசாரணை நடத்தினர் என்பதால், இருவரையும் தனியறைக்கு அழைத்து சென்று சோதனையிடப்பட்டனர்.

இரண்டு பெண்களும் தமது உள்ளாடைகளுக்குள் மறைத்து வைத்துக் கடத்தி வந்த தங்கத்தை அதிகாரிகள் மீட்டனர். இருவரையும் கைது செய்தனர். அவர்களிடமிருந்த கைப்பற்றப்பட்ட தங்கத்தின் மொத்தப் பெறுமதி ஒரு கோடி 10 லட்சம் இந்திய ரூபாய் என்றும் இருவரும் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.01.2023 இல் வெளியிடப்பெற்றது.